# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ் ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆகஸ்ட் - 2020 தனிப்பிரதி 10.00




தோற்றம் : 23.08.1948 மறைவு : 23.07.2020

## தோழர் எஸ்.பாலசுப்பிரமணியன்

முன்னாள் மாநிலச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

அவர்களுக்கு செவ்வணக்கம்

# ஜாக்டோ ஜியோ சார்பில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் முறையீட்டு மனுவினை அளித்தபோது...



தூத்துக்குடி






கன்னியாகுமரி



திருச்சி



கோவை



கடலூர்



தருமபுரி மருத்துவ முகாம்



கிருஷ்ணகிரி

# அரசு ஊழியர்

ஆகஸ்ட் 2020

மலர் : 41 இதழ் : 8

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி
முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com


*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.
ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### தீ வினை!

முடியெரிந்தான் தலைகாய்ந்து கிடந்ததாலே
முதுகெரிந்தான் சுமைதூக்கி வளைந்ததாலே
அடியெரிந்தான் வயலுழுத சேற்றினாலே
அனலெரிந்தான் பெருமூச்சுக் காற்றினாலே
இடையெரிந்தான் கிழிந்திருந்த உடையினாலே
எரிந்ததெல்லாம் பொறுத்திருந்தான் ஆதலாலே
குடியிருந்த வீடெரிந்தான் கொள்ளைத்தீயில்
கூண்டோடும் குலத்தொடும் எரிந்தேபோனான்!

– **தணிகைச் செல்வன்**



தலைவர் மடல்

# சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவும், புதிய கல்விக் கொள்கையும்!

இந்திய மக்கள் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரியுடன் உயிருக்காக போராடிக்கொண்டிருக்கும் வேளையில், ஊரடங்கு காலத்தை பயன்படுத்திக் கொண்டு மத்திய மோடி அரசாங்கம் இந்தியாவை கார்ப்பரேட்டுகளுக்கு துண்டு போட்டு விற்று வருகிறது. சென்ற மாதத்தில் ரயில்வே, விமான சேவை, நிலக்கரி சுரங்கங்கள் போன்றவற்றை தனியாருக்கு விற்க நடவடிக்கை எடுத்த மோடி அரசு இந்த மாதத்தில் கொரோனா காலத்தில் யாரும் எதிர்த்துக் கேட்க முடியாது என்ற தைரியத்தில் முக்கியமான இரண்டு விஷயங்களை மக்கள் நலனைப் பற்றி அக்கறை கொள்ளாமல் செயலுக்கு கொண்டுவர முடிவு செய்துள்ளது. முதலாவது, கார்ப்பரேட்டுகளுக்கு துண்டு துண்டாக இந்த தேசத்தை கொடுத்து கொடுத்து மிகவும் சலித்துப்போன மோடி அரசு இந்தியாவின் வளங்கள் அனைத்தையும் ஒரே சட்டத்தின் மூலம் தாரை வார்த்துக் கொடுக்க துணிந்திருக்கிறது. அதன்பெயர்தான் ''சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020 (EIA-2020 = Environment Impact Assessment -2020)''. இரண்டாவது, நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதமும் நடத்தாமல், நாடாளுமன்றத்தை புறக்கணித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள அரசுப் பள்ளிகளை முற்றாக ஒழித்துக் கட்டக்கூடிய, ஏழை எளிய மாணவர்களின் கல்விக் கனவுகளை குழிதோண்டிப் புதைக்கும் "புதிய கல்விக் கொள்கை''.

## சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020 (EIA-2020)

பசுமைக் காடுகள் நிறைந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளும் Ever Green Forest என்றழைக்கப்படும் வடகிழக்கு பசுமைக்காடுகள், கிழக்குத் தொடர்ச்சி மலைகள் அதில் உள்ள கனிம வளங்கள், பல்லாயிரம் கிலோமீட்டர் தூரம் கொண்ட கடற்கரைகள் 100க்கும் மேற்பட்ட ஆறுகள் சதுப்புநிலக்காடுகள், தக்காண பீடபூமி என வியத்தக்க வளங்களைக் கொண்ட நாடு இந்தியா. ஆனால் இந்த வளங்களை கார்ப்பரேட்டுகளிடம் கொட்டிக்கொடுத்து இந்தியாவின் சுற்றுச்சூழலை கொன்றழிக்க மோடி அரசு அலைகிறது. அதற்கானச் சட்டங்களை உடைத்து வருகிறது

1972ம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் "மனித சூழல் குறித்த ஸ்டாக்ஹோம் மாநாடு பிரகடனத்தின்" அடிப்படையில், "சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் அடிப்படைக் கடமை" (Fundamental

Duty) என்பது 1976ல் கொண்டு வரப்பட்ட 42வது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில்தான் “போபால்” துயரத்திற்குப் பிறகு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. 1994ஆம் ஆண்டு முதல், இந்தியாவில் இந்த சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், தற்போது, ‘சூழலியல் தாக்க மதிப்பீடு 2006’ சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது.

2006ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சுற்றுச் சூழல் சட்டமே பல குறைபாடுகளை கொண்டதுதான். இருப்பினும் ஒரு சில பாதுகாப்புகளாவது அதில் இருந்தன. சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் பசுமை தீர்ப்பாயம், உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் தலையீடுகள் தொடர்ந்தவண்ணம் இருந்தன. ஆனால் 2006 சட்டத்தை வலுவாக்கப் போகிறோம் என்ற பெயரில் மிகவும் ஆபத்தானதாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020 வந்துள்ளது. கொரோனா பாதிப்புள்ள இந்த சூழலில் கடந்த மார்ச் 23ஆம் தேதி வரைவு அறிக்கையை தயாரித்து ஏப்ரல் 11ஆம் தேதிக்குள் இதுகுறித்த கருத்துக்களை மக்கள் கூற வேண்டும் என மத்திய அரசு கூறியது. இதனிடையே தில்லி உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இது இந்திய நாடு முழுவதும் பாதிப்புகளை உருவாக்கும் வரைவு என்பதால் 22 மாநில மொழிகளில் இதை மொழிபெயர்த்து 10 நாட்களில் வெளியிட வேண்டும் என உத்தரவிட்டு கருத்து சொல்லும் காலத்தை ஆகஸ்ட் 11 வரை தள்ளி வைத்துள்ளது. ஆனால் இதுவரை மொழிபெயர்ப்பு பணி நடக்கவில்லை.

இந்தியாவில் பெருநிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளைத் தொடங்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986ன்கீழ் அனுமதி பெற வேண்டும். அதன்படி, சூழலியல் தாக்க மதிப்பீடு 2006 சட்டத்தின்கீழ், திட்டம் குறித்த சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்ய வேண்டும். அரசு சார்பில் அமைக்கப்பட்ட குழு ஆய்வு செய்யும். அப்போது அந்த பகுதி மக்களிடம் கருத்துக் கேட்கப்படும். அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படும். சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படாத திட்டமாக இருப்பின் அனுமதி வழங்கப்படும். ஆபத்து ஏற்படும் எனில் அனுமதி மறுக்கப்படும். இதுதான் சட்ட நடைமுறை. ஆனால் தற்போது மோடி அரசு “புதிய சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு வரைவு அறிவிக்கை 2020” என்ற ஒன்றை முன்வைத்திருக்கிறது. அதில் இனி வரும் திட்டங்களுக்கு மட்டுமல்ல, ஏற்கெனவே ஸ்டெர்லைட் போன்ற நிறுவனங்களின் விதிமுறை மீறல்களுக்குச் சட்ட அங்கீகாரம் தரும் வகையில் மாற்றப்பட்டிருக்கிறது. சுருக்கமாக சொல்வதென்றால் விதி மீறல்களையே விதியாக மாற்றியிருக்கிறது.

புதிய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவுப் படி எந்த ஒரு திட்டத்தையும் தேசிய நலன் அல்லது தேசிய முக்கியத்துவம் என்று குறிப்பிட்டு விட்டால் எந்த தரவும் பொதுவெளிக்கு வராது என்கிறது. இது பேராபத்தை உருவாக்கும். தற்போதுகூட சென்னை - சேலம் எட்டு வழிச்சாலை திட்டம் “தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது” என்பதால் இதற்குச் சுற்றுச்சூழல் அனுமதி தேவையில்லை எனத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இன்னும் வரைவு நிறைவேற்றப்படவில்லை. அதற்கு முன்பே இந்த வாதம் என்றால் என்ன நோக்கத்திற்காக இந்த வரைவு என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

சூழலியல் தாக்க மதிப்பீடு 2006 சட்டத்தின் படி ஏ வகை திட்டங்களுக்கு மத்திய அரசும், பி வகை திட்டங்களுக்கு மாநில அரசும் சூழல் அனுமதி வழங்கும். ஆனால் பி வகை திட்டங்களில் இருந்த பலவற்றை பிரித்து பி2 திட்டம் என மாற்றிருக்கிறது. அதாவது பி2 திட்டங்களுக்கு மக்களிடம் கருத்துக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல் 50 ஆயிரம் சதுர அடி வரையிலான கட்டுமானங்களுக்கு உள்ளூர் நிர்வாக அனுமதி தேவையில்லை எனவும் மாற்றியிருக்கிறது. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவின் தலைவரையும், உறுப்பினர்களையும் மத்திய அரசே நியமிக்குமாம். ஆக கூட்டாட்சி தத்துவத்தையும் இதன் மூலம் சவக்குழிக்குள் தள்ளியிருக்கிறது.

புதிய வரைவின்படி சூழல் பாதிப்பு குறித்து யாரும் எளிதாக நீதிமன்றத்தைக்கூட நாட முடியாது. தவறுக்கு உடந்தையாக இருப்பவர்களே தவறு செய்திருப்பதாகக் கூறி நீதிமன்றத்தை நாடினால்தான் உண்டு. இந்த வரைவு நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் சுற்றுச்சூழல் சீர்குலைந்து எதிர்காலம் கேள்விக்குறியாகும். இந்திய அரசியல் சட்டத்தில் பிரிவு 51A(9) ஒவ்வொரு குடிமகனுக்கும் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அடிப்படை கடமை என்று அறிவிக்கிறது. அப்படி எனில் சுற்றுச்சூழலை சூறையாடுவோரை எதிர்த்து கேள்வி கேட்கும் உரிமையை EIA 2020 பறிப்பது எப்படி சரியாகும்? மக்கள் வாழ்விடங்களை, வாழ்வாதாரங்களை பறிக்கும் திட்டங்களை எதிர்த்து கேள்விகேட்கும் உரிமையை அல்லது மக்கள் கருத்து கேட்கும், சொல்லும் உரிமையை பறிப்பது எப்படி சரியாகும்? ஆக அரசியல் சட்டத்தின் அடிப்படையை கேள்வி கேட்கும் இந்த சட்டத்தை... கருத்துச் சுதந்திரத்தை சூறையாடப் பார்க்கும் இந்த வரைவை... சுற்றுச்சூழலுக்கு எதிராக செயல்படுபவர்கள் மீது நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதை தடுக்கும் இந்த வரைவை... இப்போதே எதிர்க்க வேண்டியது நம் அனைவருக்கும் உள்ள தார்மீக கடமையாகும்.

# புதிய கல்விக் கொள்கை

புதிய கல்விக்கொள்கை உருவாக்கத்தில் மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல், அவர்களது கருத்துக்களையும் புறக்கணித்து தன்னிச்சையாக புதிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தில் எவ்வித விவாதமும் நடத்தாமல், நாடாளுமன்றத்தை முற்றிலும் புறக்கணித்து இந்த புதிய கல்விக்கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கொரோனா கொடுங்காலத்தில் அவசர அவசரமாக புதியக் கல்விக்கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள விதம் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. புதிய கல்விக் கொள்கை குறித்து கருத்துக் கேட்பு என்ற பெயரில் ஆங்காங்கே கண்துடைப்பு நாட கங்கள் நடத்தப்பட்டன. பெரும்பாலான கல்வியாளர்களும், கட்சிகளும் இந்த கொள்கையை கடுமையாக எதிர்த்தன. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சில அம்சங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அடிப்படையில் வரைவு அறிக்கையில் கூறப்பட்டிருந்த கொள்கைகளின் அடிப்படையிலேயே இப்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அறிவிப்புகளும் அமைந்துள்ளன.

வரைவு அறிக்கையில் கலை, அறிவியல் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது தற்போது கட்டாயமல்ல என்று கூறப்பட்டுள்ளதே தவிர கைவிடப்படவில்லை. ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக் கல்வியை முடிப்பதற்குள் ஏதாவது ஒரு தொழில் கல்வி அறிவை பெற்றிருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதும் மறைமுகமாக குலக்கல்வியை திணிக்கும் ஏற்பாடே ஆகும். இந்தி மற்றும் சமஸ்கிருத திணிப்பை மையமாக கொண்டே புதிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 5ஆம் வகுப்பு வரையிலும் தாய்மொழி அல்லது பிராந்திய மொழி பயிற்று மொழியாக இருக்கும் என்று கூறப்பட்டாலும் அடிப்படையில் மும்மொழி திட்டத்தை திணிக்கும் நடவடிக்கை கைவிடப் படவில்லை.

ஆர்எஸ்எஸ் அமைப்புகள் நடத்தும் கல்வி நிலையங்கள் வைத்துள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த கல்விக் கொள்கை அமைந்துள்ளது. மேலும் துவக்கக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை முற்றிலும் தனியாருக்கு திறந்து விடுவதை இந்த கொள்கை நோக்கமாக கொண்டுள்ளது. மாநிலங்களையும், நாடாளு மன்றத்தையும் முற்றாக புறக்கணித்து அவசர அவசரமாக திணிக்கப்பட்டுள்ள இந்த புதிய கல்விக்கொள்கை அடிப்படையில் பெரும்பகுதி ஏழை, எளிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியை கொஞ்சம் கொஞ்சமாக மறுக்கும் கொள்கையாகவே அமைந்துள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 12 ஆண்டுப் பள்ளிக் கல்வி சிறப்புற நடைபெற்று வருகின்றது. சிறு கிராமத்திலுள்ளவர்க்கும் உயர்கல்வி செல்ல வாய்ப்பு தரப்பட்டுள்ளது. இப்பொழுது அதனை 11 ஆண்டாகக் குறைப்பது பிற்போக்கான செயல். பட்டப்படிப்பு 4 ஆண்டுகளுக்குக் குறையாது இருக்குமாதலால் கல்விச் செலவு அதிகரிக்கும். 12ஆம் வகுப்பு வரை இலவசக்கல்வி பெற்று வரும் மாணவர்க்கு கூடுதல் செலவாகும். 6ஆம் வகுப்பிலிருந்து ஒரு கைத்தொழில் பழக வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடில்லை. அதனைப் பள்ளியில் உறுதி செய்யாது ஒரு தொழிலகத்தில் பயிற்சியாளராகக் கற்க வேண்டும் என்று கூறியிருப்பதே இராஜாஜியின் குலக் கல்வித் திட்டமாகவே சிற்றூர்களில் மாறிவிடும். கிராமங்களில் தொழில் பயில வாய்ப்புகள் குறைவாதலால் பெற்றோரிடமே தொழில் கற்க வேண்டியிருக்கும். ஆக அனைவருக்கும் கல்வி என்பதற்கு மாறாக ஒரு சிலருக்கு மட்டுமே கல்வி என்ற வர்ணாசிரமக் கோட்பாட்டை மீண்டும் புகுத்துவதே தேசிய கல்விக் கொள்கையின் நோக்கம் ஆகும்.

இந்த தேசிய கல்விக் கொள்கையில் அனைவருக்கும் கல்வி வழங்குவது பற்றி எந்தவித குறிப்பான திட்டமும் இல்லை. அது மட்டுமில்லாமல் மூன்றாம் வகுப்புக்கு பொதுத்தேர்வு வைத்து ஏற்கனவே படிப்பவர்களையும் இடை நிறுத்தம் செய்வதற்கு இந்த கல்விக் கொள்கை வழிவகுக்கிறது.மத்திய அரசு 2014ஆம் ஆண்டு வெளியிட்ட பள்ளி விவரங்களின் படி துவக்கக் கல்வியில் (primary) 22.3%; ஆரம்பக் கல்வியில் (elementary) 40.8%; உயர்நிலைக் கல்வியில் (secondary) 50.3% மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தம் செய்து விடுகின்றனர் என்று தெரிவித்துள்ளது. இப்படி ஏற்கனவே இடைநிற்றல் சதவீதம் மிக அதிகமாக இருக்கும் நிலையில் தொடர்ச்சியாக பொதுத் தேர்வுகளை வைப்பது மேலும் இதை அதிகரிக்கவே வழி வகுக்கும்.

உயர் கல்வியை முழுமையாக மத்திய அரசின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு செல்வதற்கு இந்த கல்விக் கொள்கை வழிவகுக்கிறது. மருத்துவப் படிப்பைப் போலவே எல்லா விதமான பட்டப் படிப்புகளுக்கும் அகில இந்திய அளவில் பொது நுழைவுத்தேர்வைக் கொண்டுவருவது பெரும் பாலானவர்களை உயர் கல்வி பெறாமல் தடுப்பதற்குத் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ள சூழ்ச்சியே தவிர வேறு அல்ல.. இந்தப் புதிய கல்விக் கொள்கையில் உள்ள ஆபத்துகளை ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பொதுமக்களுக்கு புரிய வைத்து அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கொரோனா பெருந்தொற்றின் காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ள சூழலைப் பயன்படுத்திக்கொண்டு மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறிக்கும் விதமாகவும், கல்வியை காவிமயமாக்கும் நோக்கத்தோடும் கொண்டு வரப்படும் இந்த கல்விக் கொள்கையை தமிழக அரசு நிராகரிக்க வேண்டும்.

# ஆஹா என்று எழுகுது பார்...!

> “அரசு என்பது வேறு... அரசாங்கம் என்பது வேறு...
> அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளை
> எதிர்க்கின்ற அதே நேரத்தில் அரசு இயந்திரத்தின் செயல்பாடுகள்
> ஜனநாயகபடுத்தப்படவும் நாம் போராட வேண்டும்”

**ஆ**ம்... இன்றைய தமிழக அரசின் சூழலை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு மேலே சொல்லப்பட்டவாறு அரசு இயந்திரத்தின் நிர்வாக செயல்பாடுகளை ஒழுங்குபடுத்திடவும் அரசாங்கத்தின் ஊழியர், மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்துப் போராடவும் தயாராக வேண்டிய நிலை நம்முன் உள்ளது.

## தேசிய எதிர்ப்பு தினம் நாள் 3.7.2020

அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழுவின் முடிவின்படியும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின் அடிப்படையில் மற்றும் மத்திய தொழிற்சங்கங்களின் வங்கி, இன்சூரன்ஸ், தொலைத்தொடர்பு அனைத்து ஊழியர் சங்கமும் நாடு தழுவிய அளவில் தேசிய எதிர்ப்பு தின அறைகூவல் விடுக்கப்பட்டது.

இந்த தேசிய எதிர்ப்பு தினத்தில் மத்திய அரசின் கொள்கையால் இந்த கொரோனா காலத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கை, ஏழை எளிய மக்களின் நலன் சார்ந்த கொள்கையாக இல்லை என்பதை கவலையோடு அனைத்து தொழிற்சங்கங்கள் பரிசீலித்துள்ளது.

கொரோனா பாதிப்பால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வர உலக நாடுகள் பெரும் சவால்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், சாமானிய மக்களுக்கு குறிப்பாக அன்றாடங்காய்ச்சிகளாக, தினசரி அத்தக்கூலிகளாக, ஒப்பந்த ஊழியர்களாக மாறி அவர்களின் வாழ்க்கையை கற்பனை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் உட்பட அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஓராண்டுக்கும் மேலாக கடுமையாக உயர்ந்து வரும் அத்தியாவசிய பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பொருட்கள் விலை உயர்வு இந்த கொரோனா காலத்தில் ஏழை எளிய மக்கள் உள்ளிட்ட அனைவரையும் கடுமையாக பாதித்துள்ளது. உயர்ந்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்திட மத்திய மாநில அரசு அக்கறை செலுத்தாமல், சர்வதேச நிதி நெருக்கடியின் காரணமாகவும், அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து வருவதாக சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

கடுமையான விலைவாசி உயர்விலிருந்து மக்களை பாதுகாத்திட பொது விநியோக முறையை அனைவருக்கும் உருவாக்கிட வேண்டும், அதன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கிட வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய மத்திய அரசு ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு, ஒரே தளபதி என்ற கோட்பாட்டில் ஒட்டுமொத்த பொது விநியோக முறை முற்றிலும் கைவிடும் நிலையில் சட்டங்களை இயற்றிக் கொண்டு உள்ளது. அதை தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஊகவணிகத்தையும் ரத்து செய்ய வேண்டும். இதனால் சிறு குறு தொழில் செய்பவர்கள் முற்றிலும் நீர்த்துப் போகச் செய்துள்ளது மத்திய பிஜேபி அரசு என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

உலக பொருளாதார மந்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும் நாடு முழுவதும் 45 ஆண்டுகள் இல்லாத வேலையிழப்புகள் அதிலும் கடந்த ஓராண்டு காலத்தில் கடுமையாக இருக்கிறது. உலக அளவில் 14.7% கோடி பேர் வேலை இழப்பு. அது இந்தியாவின் 100க்கு 67% வேலை இழப்பு.



அதில் எதிர்காலத்தை நினைத்து கலங்குபவர்கள் 67%. 50% பேர் பொருளாதாரம் கடும் பாதிப்பு, 30 சதவீதம் ஊதிய வெட்டு, பொருளாதார பிரச்சினை காரணமாக 23% வேலையில் இருந்து தற்காலிகமாக விடுவிப்பு, 47% வேலை இழந்தவர்கள் 30 வயதுக்கு உட்பட்டவர்கள், 30% இது எவ்வளவு காலத்திற்கு தொடரும் என அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், 82% மக்கள் தங்கள் செலவுகளை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள் உணவு உட்பட ஆய்வறிக்கைகள் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு பன்னாட்டு நிறுவனங்களை பாதுகாத்திட தொடர்ந்து முயல்கிறது 7.70 லட்சம் கோடி ரூபாய் பன்னாட்டு நிறுவனங்களை பாதுகாக்க பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டங்களை அமல்படுத்துகின்ற போது அதனால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளித்திடுவதும் அவசியம் என தொழிற்சங்கங்கள் மத்திய அரசை வலியுறுத்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்டங்களை கறாராக அமல்படுத்த வேண்டும் எனவும், 44 சட்டங்களை நான்காக குறைப்பது முற்றிலும் கைவிட வேண்டும், முறைசாரா தொழிலாளர்களுக்கென தேசிய நிதியம் அமைத்து அவர்களுக்கென ஒரு சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளோம்.

குறைந்தபட்ச கூலி சட்டம் பல மாநிலங்கள் 8 மணி நேர வேலையை 12 மணி நேரமாக உயர்த்துவதை கைவிட்டு வேலை நேரம், சமூக பாதுகாப்பு, பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் வேலை நிறுத்த உரிமை உள்ளிட்ட தொழிற்சங்க உரிமைகளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

வரவு செலவு பற்றாக்குறையினை சரிக்கட்டுவதற்காக லாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்க கூடாது மாறாக பொதுத்துறை நிறுவனங்களின் கீழ் அதிக அளவில் உள்ள நிதி இருப்பு மற்றும் உபரியை அவற்றை நவீனப்படுத்திட விரிவாக்கிடவும் பயன்படுத்திட வேண்டும் (உதாரணம் இன்சூரன்ஸ், வங்கி, பாதுகாப்பு, மின்சாரம், ரயில்வே, விமானம்) என மத்திய மாநில அரசுகளை தொழிற்சங்கங்கள் அரசு நிறுவனங்களாக தொடர்ந்து செயல்பட உத்தரவாதப்படுத்த வேண்டும்.

அகில இந்திய தேசிய எதிர்ப்பு தினத்தில் தேசத்தை பாதுகாப்போம், தேச ஒற்றுமையை பாதுகாப்போம், ஊழியர் விரோத மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக மத்திய மாநில அரசுகளை எதிர்த்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழகம் முழுவதும் 3.7.2020 அன்று மாவட்டங்களில் மிக எழுச்சிகரமாக உணர்வுபூர்வமாகவும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கொரோனா காலத்தில் தமிழ்நாடு அரசு சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி மாவட்ட, வட்ட, முன்னணி தோழர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு உயிரை துச்சமென மதித்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழர்களை எத்தனை முறை பாராட்டினாலும் தகும்.

## தேசிய கல்விக்கொள்கை - 2020

ஏற்கனவே முன்பு சொன்னதுபோல் மத்திய அரசு இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் அரசியல் சட்டத்திற்கு எதிராகவும் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதிதான் தற்போது தேசிய கல்விக் கொள்கை 2020.

தேசிய கல்விக் கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கல்வி என்பது நமது அரசியலமைப்பு சட்டத்தில் பொதுப் பட்டியலில் உள்ளது. புதிய கல்விக் கொள்கை உருவாக்கத்தில் மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமல் அவர்களது கருத்துகளையும் புறக்கணித்து தன்னிச்சையாக இந்த கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி கொள்கை குறித்து நாடாளுமன்றத்தில் எந்தவித விவாதம் நடத்தாமல், நாடாளுமன்றத்தை முற்றிலும் புறக்கணித்து இந்த புதிய கல்விக் கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கொரோனா காலத்தில் அவசர அவசரமாக புதிய கல்விக் கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள விதம் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. அதுவும் இந்த கொரோனா காலத்தில் புதிய கல்விக் கொள்கை குறித்து கருத்துக் கணிப்பு என்ற பெயரில் ஆங்காங்கே கண்துடைப்பு நாடகங்கள் நடத்தப்பட்டன. (2019 ஜுலை 31 வரை 2 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் கருத்துக்கள்

கிடைக்கப்பெற்ற நிலையில் அவற்றை பற்றி விளக்கங்கள் மற்றும் தெளிவுகள் எதுவும் கூறவில்லை). பெரும்பாலான கல்வியாளர்களும் கட்சிகளும் இந்த கொள்கையை கடுமையாக எதிர்த்தன.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சில அம்சங்களை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் அவற்றின் அடிப்படையில் வரைவு அறிக்கையில் கூறப்பட்டிருந்த கொள்கைகளின் அடிப்படையிலேயே இப்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அறிவிப்புகளும் அமைந்துள்ளன.

வரைவு அறிக்கையில் கலை, அறிவியல் படிப்புகளுக்கு பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது. அது தற்போது கட்டாயமில்லை என்று கூறப்பட்டுள்ளதே தவிர கைவிடப்படவில்லை.

ஒவ்வொரு குழந்தையும் பள்ளி கல்லூரி படிப்பை முடிப்பதற்குள் ஏதாவது ஒரு தொழிற்கல்வி அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருப்பதும் மறைமுகமாக குலக்கல்வியை திணிக்கும் ஏற்பாடு ஆகும்.

இந்தி மற்றும் சமஸ்கிருத திணிப்பை மையமாகக் கொண்டு புதிய கல்விக் கொள்கை வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது ஐந்தாம் வகுப்பு வரையிலும் தாய்மொழி அல்லது பிராந்திய மொழி பயிற்று மொழியாக இருக்கும் என்று கூறப்பட்டாலும், அடிப்படையில் மும்மொழித் திட்டத்தை திணிக்கும் நடவடிக்கை கைவிடப்படவில்லை.

பத்திரிகைகள் கருத்தைத் தெரிவிக்கிறது. இந்த புதிய கல்விக் கொள்கை ஆர்எஸ்எஸ் அமைப்புகள் நடத்தும் கல்வி நிலையங்கள் வைத்துள்ள பாடத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த கல்விக் கொள்கை அமைந்துள்ளது. மேலும் துவக்க கல்வியிலிருந்து உயர் கல்வி முறையை முற்றிலும் தனியாருக்கு திறந்து விடுவதை இந்தக் கொள்கை நோக்கமாக கொண்டுள்ளது. அனைத்து மாநிலங்களையும் நாடாளுமன்றத்தையும் முற்றாக புறக்கணித்து அவசர அவசரமாக திணிக்கப்பட்டுள்ள இந்த புதிய கல்விக் கொள்கை அடிப்படையில் ஏழை, எளிய, நடுத்தர மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியை கொஞ்சம் கொஞ்சமாக மறுக்கும் கொள்கையாகவே அமைந்துள்ளது. எனவே மத்திய அரசின் கொடிய கொள்கை கடுமையான முறையில் எதிர்க்கப்பட வேண்டும்.

## வேளாண் அவசர சட்டம்

நமது நாட்டில் உள்ள விவசாயிகளில் ஏறத்தாழ 90% சிறு குறு உற்பத்தியாளர்கள் அவர்களால் பெரிய சந்தைப்படுத்துதலை மேற்கொள்ள முடியாது. பெரும்பாலானோர் கடனாளிகளாக உள்ளதால் உற்பத்தி செய்தவற்றை உடனடியாக விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களின் இத்தகைய நெருக்கடி சூழலை வியாபாரிகளும், இடைத்தரகர்களும் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதாவது விளை பொருளை விற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் பொருட்களை வாங்கி வந்தனர். இதனால் விவசாயிகளுக்கு உரிய லாபம் கிடைக்காமல் இருந்தது. இந்த முறைகளை தடுக்கும் விதமாக வேளாண் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக் குழு சட்டம் கொண்டு வரப்பட்டது.

1960களில் பசுமைப் புரட்சி ஏற்படுவதற்கு முன்பு வரை நாட்டின் உணவுப் பற்றாக்குறை நிலவியது. அப்போது அந்தப் பற்றாக்குறையை பயன்படுத்தி பதுக்கல்காரர்கள் கள்ளச் சந்தைகளில் உணவுப் பண்டங்களை பதுக்கி செயற்கையான உணவு பஞ்சத்தை உருவாக்கி நுகர்வோர்களைச் சுரண்டி விடாமல் தடுப்பதற்காக அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955ல் இயற்றப்பட்டது. அதன்படி உணவு தானியங்களையும், பிற உணவுப் பண்டங்களையும் சேமிப்பு கிடங்கில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் சேமிப்பது (பதுக்குவது) தடை செய்யப்பட்டது. ஆனால் தற்போது இந்த சட்டத்திலும் மத்திய அரசு திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறது. அதேபோல் விற்பனைக்குழு சட்டங்களை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் வேளாண் விளைபொருள்களுக்கு அவசர சட்டம் 2020 உழவர்கள் விலை மற்றும் பண்ணை சேவைகள் ஒப்பந்த அவசர சட்டம் 2020 ஆகிய அவசர சட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொரோனா தொற்று எண்ணிக்கை, பொருளாதார இழப்பு என நாடு தடுமாற்றத்தை சந்தித்து வரும் இந்த வேளையில் மத்திய பிஜேபி அரசு எடுக்கும் ஒவ்வொரு முடிவும் கடுமையான தாக்குதலை

மக்கள் மேல் சுமத்திக் கொண்டு இருக்கிறது. மக்கள் நலத்திட்டங்கள், நிதிப் பங்கீடு சட்ட திட்டங்கள் என எந்தவொரு முக்கிய நடவடிக்கைகளிலும் மாநில அரசுகளுடனும், சம்பந்தப்பட்ட துறை வல்லுனர்கள், அரசியல் கட்சிகளை கலந்து ஆலோசிக்காமல் தானடித்தமூப்பாக தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து வருகிறது. மத்திய அரசின் மீதான கடுமையான குற்றச்சாட்டாக இருக்கிறது.

இதனால் பல சமயங்களில் அரசின் முடிவுகள் எந்தத் தரப்புக்காக எடுக்கப்பட்டதோ அந்த தரப்புக்காக பாதகமாக அமைந்து விடுகிறது. அவ்வாறான பாதகமான அம்சங்கள் நிறைந்த ஒன்று தான் வேளாண் விளைபொருள் விற்பனை தொடர்பாக ஜூன் மாதத்தில் மத்திய அரசு பிறப்பித்த அவசர சட்டங்கள். இதுவரையில் வேளாண் விளைபொருள் விற்பனை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மாநில அரசின் கையில் இருந்தது. இந்நிலையில் மாநில அரசுகளின் அதிகாரத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும் ஒப்பந்த முறைகள் தொடர்பாக இரண்டு அவசர சட்டங்களை 1955ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது.

இந்த சட்டங்களினால் யாருக்கு என்ன சாதகமான அம்சம், பாதகமான அம்சம் என்று பார்த்தால்

1. அதிக விலை கிடைத்தாலும்கூட தொலைவிலுள்ள சந்தைக்கு தங்கள் விளைபொருட்களை விற்பனை எடுத்துச் செல்வது பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை. எவ்வகையில் பார்த்தாலும் இந்த அவசர சட்டங்களால் விவசாயிகளுக்கு எந்தப் பலனும் இல்லை.

2. சேமிப்புக் கிடங்குகளிலும் உணவு பதப்படுத்தலிலும் தனியார் முதலீடு பெருகுவதால் இவர்களுக்கு என்ன பலன்? அத்தகைய தொழில்களில் முதலீடு செய்பவர்கள் இச்சட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் அனுபவத்தை உங்களிடம் பகிர்ந்துக் கொள்வார்கள் என்பதற்கு எந்த முன்னுதாரணமோ கோட்பாடு ரீதியாக முகாந்திரமோ கிடையாது.

3. கோடிக்கணக்கான கிராமப்புற ஏழைகள் காய்கறி, பழங்கள் போன்றவற்றை வாங்கும் சக்தியற்றவர்களாக வெறும் தானியங்களை அதிகமாக உண்டு சரிவிகித உணவின்றி ஊட்டச்சத்து குறைபாடுகளுக்கும், நோய்களுக்கும் ஆளாவார்கள். மக்கள், பத்திரிகைகளும், வேளாண் வல்லுனர்களும் தெரிவிக்கின்றனர். தற்போது கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டங்கள் வேளாண் துறையில் பெரு முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தவே வழிவகுக்கும்.

## மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம், பெருந்திரள் முறையீடு, பிரச்சார இயக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 28.6.2020 அன்று காணொலிக் காட்சி மூலம் வலைதளத்தில் நடத்தப்பட்டது. கோவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. அரசு ஊழியர் சங்கத்தின் 36 ஆண்டு கால வரலாற்றில் முதன்முதலாக காணொலி காட்சி மூலம் மாநில செயற்குழு நடத்தப்பட்டுள்ளது.

மாநில செயற்குழுவில் 33 மாவட்டங்களிலிருந்து மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். இந்த காலத்திலும் அனைத்து தோழர்களும் காணொலி காட்சியில் பங்கேற்று தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தது சிறப்பம்சமாகும். மாநில செயற்குழுவில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

## 8.7.2020 முதல் 10.7.2020 வரை கோரிக்கை பிரச்சாரம் மற்றும் கொரோனா விழிப்புணர்வு

கடந்த 2019 ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலைநிறுத்தத்தின்போது 17பி குற்றக் குறிப்பாணை, பணியிட மாறுதல் முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியம் உள்ளிட்ட ஆறு தோழர்களின் ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்து ஓய்வு காலப் பயன்கள் வழங்கிட வேண்டும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, எம்.ஆர்.பி. செவிலியர்கள், ஊர்ப்புற நூலகர்கள் ஆகியோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் மீது போடப்பட்ட 17பி குற்றக் குறிப்பாணைகளை ரத்து செய்ய வேண்டும், பறிக்கப்பட்ட சலுகைகள் அகவிலைப்படி முடக்கம், சரண்டர் ரத்து, ஜிபிஎப்

வட்டி குறைப்பு, வேலை நியமன தடை சட்டம், 59 வயது உயர்த்தியது திரும்பப் பெற வேண்டும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட இறந்த அரசு ஊழியர்கள் அனைவருக்கும் 50 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும், பழிவாங்கும் நடவடிக்கையில் பணியிட மாறுதல் ரத்து செய்யப்பட வேண்டும், உள்கட்டமைப்பு ஏற்படுத்தாமல் IFHRMS திட்டத்தை அமுல்படுத்துவதை நிறுத்தி வைத்து பழைய முறையில் பட்டியல் தயாரிக்க அனுமதிக்க வேண்டும், காலிப் பணியிடம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் மாவட்டங்களில் மிகச்சிறப்பாக பிரச்சார இயக்கம் நடைபெற்றது. பெரும்பாலான மாவட்டங்களில் கொரோனா விழிப்புணர்வு செய்தும், முகக்கவசம், கபசுரக் குடிநீர், ஆர்கானிக் ஆல்பம் 30சி, மாவட்ட ஆட்சியர் மூலம் பல்வேறு அதிகாரிகளைக் கொண்டு பிரச்சார இயக்கம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. ஊழியர்கள் மத்தியிலும் அதிகாரிகள் மத்தியிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மீது மிகப் பெரிய மரியாதையும், ஊழியர்களிடம் அளப்பரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா எனும் கொடிய நோய் தொற்றை எதிர்த்து களத்திலும் போராடிக் கொண்டும், தங்களது உரிமைகள் பறிக்கும் போது அரசாங்கத்தை எதிர்த்துடம போராடியது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் என்பதை அனைத்து தொழிற் சங்கங்கள் மத்தியில் உத்வேகத்தையும் மேலும் போராட்ட குணாம்சத்தையும் வலுப்படுத்தியுள்ளது என்பது மிகையல்ல தோழர்களே.

## 14.7.2020 ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெருந்திரள் முறையீடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் மூலம் பெருந்திரள் முறையீடு கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல்துறையினர் ஆர்ப்பாட்டம் செய்தால் வழக்குப் பதிவு செய்து கைது செய்யப்படும், ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளது என்று பல்வேறு அச்சுறுத்தல்களை செய்தார்கள். அதை மீறி மாநில செயற்குழு முடிவினை அனைத்து மாவட்டங்களும் மிகச்சரியாக சமூக இடைவெளியுடன் துடிப்புமிக்க உணர்வுபூர்வ மாக ஆர்ப்பாட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திய அனைத்து மாவட்டங்களுக்கும் மாநில மையத்தின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மண்ணில் 70 ஆண்டுகளுக்கு முன் ஏற்கப்பட்ட இந்திய அரசியல் சாசன விதியின்படியான தங்களது வாக்குறுதியை கடந்த நாலரை ஆண்டு காலமாக கண்டு கொள்ளவில்லையே ஏன் என்பதுதான் எங்கள் முறையீட்டின் முக்கிய அம்சமாகும். **அரசு என்பது முன்மாதிரியான முதலாளியாக திகழ வேண்டும் என்றும், தன் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்க இயலாத நிறுவனங்கள் இயங்க தகுதியற்றது என்றும் நீதிமன்றங்கள் சுட்டிக் காட்டியுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.**

எனவே தோழர்களே! இன்று கிடைத்துள்ள உரிமைகளும், வசதிகளும், வாய்ப்புகளும் பிரச்சனைகளுக்கான போராட்டங்களின் தீர்வாக வந்தவையே. பிரச்சனைகளை கண்டு அஞ்சாமல்... ஒதுங்காமல்... எதிர் கொண்டதால் பெற்ற உரிமைகளே அவை... எனவே

எழுக தோழர்களே... எழுக
கூலி உயர்வு போனஸ் என்று
கொசுக்களைப் போல்
முணங்கி திரிபவர்கள் அல்ல நாம்...
ஆயிரம் இயந்திரங்களை...
அரசு எனும் இயந்திரத்தை
இயக்கிடும் நம் கைகள்
அரசியல் இயந்திரத்தை
இயக்கும் ஓசை தான்
பூமிக்கு நாம் தரும்
பூபாள ராகம் என்பதறிவோம்...
எழுக தோழர்களே... எழுக
இனி சுரண்டும் வர்க்கங்கள் காணும்
சொப்பனங்களில் கூட
கலகக் கொடி பிடித்தே
நாம் கைகள் உயர்ந்து வரும்
என்றுணர்த்துவோம்...
ஆயிரம் அடக்குமுறை வரினும்
அழுது புலம்போம்... எழுந்து நிற்போம்...
இனி ஒவ்வொரு நிமிடமும் எமதே... என
ஓங்கி உரக்க முழங்குவோம்
எழுக தோழர்களே எழுக
நம் வெற்றி சர்வ நிச்சயம்... ஏனெனில்
வானத்தின் தோலைக் கிழித்து
காலுக்கு செருப்பாக்கிக் கொள்ளும்
வல்லமை படைத்த தொழிலாளி வர்க்கம் நாம்
எனவே நம் வெற்றி சர்வ நிச்சயமே!
ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!!

# ஜாக்டோஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

## 29.07.2020 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு மாநில ஒருங்கிணைப்பாளர்களின் சார்பில் வழங்கப்பட்ட முறையீடு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு** வணக்கம்.

அகில உலகத்தையே கொரோனா என்னும் கொடிய வைரஸ் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இந்தக் கொடிய நோய்த் தொற்றிலிருந்து தமிழக மக்களை காப்பாற்றுவதற்காக அரசு எடுக்கும் சீரிய முயற்சிகளை செயல்படுத்தி, மக்களைப் பாதுகாக்கும் உன்னத பணியில் தனது இன்னுயிரையும் துச்சமென மதித்து களப்பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்பனர்கள், மருந்தாளுநர்கள், மருத்துவத் துறை தொழில்நுட்பப் பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்ட அனைத்து மருத்துவம் சார்ந்த பணியாளர்களுடன் இணைந்து பொது சுகாதாரத் துறை, உள்ளாட்சி நிர்வாகம், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, உணவு வழங்கல் துறை, காவல்துறை, தீயணைப்புத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை ஊழியர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டுள்ளனர். தமிழக மக்களின் இன்னுயிர்களைக் காப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஜாக்டோ ஜியோ முதற்கண் வரவேற்று பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், இந்தக் கொடிய தொற்று காலத்தில் மாணவர்கள் நலன் கருதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பள்ளி இறுதித் தேர்வுகள் மற்றும் கல்லூரி செமஸ்டர் தேர்வுகளை இரத்து செய்ததற்கும் ஜாக்டோ ஜியோ நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

2) கோவிட்19 நோய்த் தொற்றினை எதிர்கொள்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஊரடங்கினால் வாழ்வாதாரத்தினை இழந்து தவிக்கும் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கும் தமிழக அரசிற்கு போதிய நிதி ஆதாரங்களை திரட்ட வேண்டிய நிலை உள்ளதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு தமிழகத்திலுள்ள 12 இலட்சம் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள், சிறப்புக் காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள், சத்துணவு அங்கன்வாடிப் பணியாளர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ தங்களது ஒருநாள் ஊதியமான 150 கோடியினை வழங்கியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

3) தமிழகத்தில் அரசுப் பணியில் பணியாற்றும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி, கடந்த ஆண்டு 22.01.2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தினை மேற்கொண்டோம்.

4) இந்நிலையில் கடந்த 29.01.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

இந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏழை எளிய மக்களின் நலன் காக்கும் அரசு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களின் நியாயமான கோரிக்கைகளை என்றும் மறுத்ததில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு ஊழியர்கள் கேட்காமல் கூட பல கோரிக்கைகளை ஊழியர்களின் நலன் கருதி நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களின் வழியில் வந்த

அம்மாவின் அரசும், மக்களின் நலனைக் காக்கும் அதே வேளையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை என்றுமே புறந்தள்ளியதில்லை என்றும்,

""அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், போராட்டத்தை உடனடியாக கை விடுங்கள். பணிக்குத் திரும்புங்கள். மக்கள் பணியை நாம் அனைவரும் ஒன்றுபட்டு தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வோம்" என்ற அன்பான வேண்டுகோளை ஏற்றும் பொதுமக்கள், மாணவர் நலன் கருதியும் அரசுப் பணிகள் முடங்குவதால் அரசுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டும் வேலைநிறுத்தத்தை கடந்த 30012019 அன்றே தற்காலிகமாக கைவிட்டு பணிக்கு ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் திரும்பினர்.

5) போராட்டம் நிறைவுக்கு வந்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும், 5068 ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பணியாளர்களின் மீது போராட்ட காலத்தில் போடப்பட்ட குற்றக் குறிப்பாணைகள் 17(பி), 1500க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணி மாறுதல் செய்யப்பட்டது ஆகியவை இன்றும் நிலுவையில் உள்ளது. குற்றக் குறிப்பாணைகள் 17(பி) நிலுவையில் உள்ளதால் பதவி உயர்வும், வருடாந்திர ஊதிய உயர்வும், பணி ஓய்வும், பணி ஓய்வுக்குப் பின்னர் கிடைக்க வேண்டிய ஓய்வூதியப் பயன்களும் கிடைக்காமல் கடும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர். போராட்டத்தின்போது காவல் துறையால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னணியில் குஜசு பதியப்பட்டு அதன் தொடர்ச்சியாக பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

6) இதோடு மட்டுமல்லாமல், ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் பங்கேற்றதால் புனையப்பட்ட குற்றக் குறிப்பாணைகள் 17(பி) நிலுவையில் உள்ளதைக் காரணம் காட்டி, முன்னாள் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. மு. சுப்பிரமணியன், அரியலூர் மாவட்டம் மருத்துவமல்லா மேற்பார்வையாளர் திரு. என். நமச்சிவாயம், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கு. உதயகுமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கே.வி. புகழேந்தி, உதவியாளர் திரு. நடேசன், அலுவலர் உதவியாளர்கள் திரு. ராஜாராம், திரு. பி.எல். அன்பு மற்றும் திரு. கே. சிவானந்தம் ஆகியோர் பணி ஓய்வு பெறும் நாளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, இதுநாள் வரை அவர்களுக்கு முறையாக பணி ஓய்வு ஆணை என்பது வழங்கப்படவில்லை. மேலும், திருவள்ளூர் மாவட்ட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளரும் வட்டாச்சியருமான திரு. கோ. இளங்கோவன் அவர்கள் முறையாக பணிஓய்வு பெற அனுமதிக்கப்படாத காரணத்தினால், நாளது வரை ஓய்வூதியப் பலன்களைப் பெறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளார். கொரோனா நோய் தொற்று மிகக் கடுமையான உள்ள இந்த நேரத்திலும், ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் கலந்து கொண்டு 17(பி) குற்றக் குறிப்பாணை பெற்ற ஒரே காரணத்திற்காக, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காமல் இருப்பது என்பது கொரோனா பாதிப்பினை விட மிகக் கொடியதாகும்.

7) இந்நிலையில், ஜாக்டோஜியோ உயர்மட்டக்குழுத் தலைவர்கள் திரு. பி. பேட்ரிக் ரெய்மாண்ட், திரு. மா. ரவிச்சந்திரன் ஆகியோர் மாணவர் நலன் கருதி தாங்கள் சார்ந்துள்ள அமைப்பின் மாநில நிர்வாகிகள் என்ற முறையில் பத்திரிக்கை / ஊடகங்களில் கருத்துகளைத் தெரிவித்தார்கள் என்ற அடிப்படையில், புனையப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக 17பி குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

8) தங்களது நியாயமான ஊதிய உயர்விற்காகப் போராடிய மருத்துவர்கள் தமிழக அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பல நூறு மைல்களுக்கு அப்பால் பணியிட மாறுதல் செய்யப்பட்டனர். பின்னர் அரசுடன் நடந்தப் பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து, அவர்களது பணியிட மாறுதல் என்பது இரத்து செய்யப்பட்டு, மீண்டும் முன்னர் பணியாற்றிய இடத்திலேயே பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதனை ஜாக்டோ ஜியோ வரவேற்கிறது. இதே அணுகுமுறையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோ ஜியோவிற்கும் கடைபிடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறோம்.

9) தமிழக அரசின் கொரோனா நோய் தொற்று ஒழிப்பு நடவடிக்கையில் அரசு ஊழியர்கள்ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டுக் கொண்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று போராட்டத்தை விலக்கிக் கொண்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில் ஜாக்டோ ஜியோ சார்பாக பலமுறை கோரிக்கை மனுக்களை அளித்தும், தமிழக அரசு ஆசிரியர்அரசு ஊழியர்

மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை இரத்து செய்து, ஒரு சுமூகமான சூழ்நிலையினை உருவாக்காமல் இருப்பது என்பது ஆசிரியர்அரசு ஊழியர்களிடையே கடுமையான அதிருப்தியினையும் வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது,

இந்நிலையில், ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கடந்த 24072020 அன்று காணொலிக் காட்சியின் வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதிய முறைதனை இரத்து செய்து காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி, கடந்த ஆண்டு 22.01.2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்அரசு ஊழியர்கள் மீதான அனைத்து நடவடிக்கைகளையும் இரத்து செய்திட வலியுறுத்தியும், தமிழகத்திலுள்ள 12 இலட்சம் ஆசிரியர்கள்அரசு ஊழியர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்தினை ஈர்த்து, கோரிக்கைகள் நிறைவேறும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உயர்மட்டக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் / மண்டல கல்லுலீரிக் கல்வி இணை இயக்குநர் வாயிலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு 29.07.2020 அன்று முறையீடு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களைச் சந்தித்திட உகந்த காலத்தையும் நேரத்தையும் ஒதுக்கித் தந்து, ஆசிரியர்கள்அரசு ஊழியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்தையும் இரத்து செய்து, எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து நல்ல முடிவினை அறிவித்து, தமிழக அரசுக்கும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கும் உள்ள சுமூகமான உறவினை நிலைநிறுத்தி மக்கள் பணியாற்றிட வழிவகை செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**மாநில ஒருங்கிணைப்பாளர்கள்**




**ஆ. செல்வம்**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்




**இரா. தாஸ்**
தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி



**நா. சண்முகநாதன்**
தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம்



**மு. அன்பரசு**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்




**கு. வெங்கடேசன்**
தலைமைச் செயலகம்



**அ. மாயவன்**
தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்



**கே.பி.ஓ. சுரேஷ்**
தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்



**டாக்டர் ஆர். தாமோதரன்**
தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்



**ச.மோசஸ்**
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
(ஜாக்டோ ஜியோ நிதிக் காப்பாளர்)



**கு. தயாகராஜன்**
தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்
(ஜாக்டோ ஜியோ செய்தித் தொடர்பாளர்)

# ஜாக்டோ ஜியோ சார்பில் முதலமைச்சருக்கு முறையீடு

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட நிலுவைத் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மீது புனையப்பட்ட 17 பி ஒழுங்கு நடவடிக்கைகள், குற்ற வழக்குகள் பணியிடை மாற்றம் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர் மு.சுப்பிரமணியன் அவர்களுக்கு பணி ஓய்வு நாளில் வழங்கப்பட்ட தற்காலிக பணி நீக்கம் ஆகியவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும், ஜாக்டோ - ஜியோ மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் ஃபெடரிக் ரைமன்ட் மற்றும் ம.இரவிச்சந்திரன் ஆகியோர் மீது புனையப்பட்ட கருத்து சுதந்திரத்திற்கு எதிரான 17 பி குன்றக் குறிப்பாணையை ரத்து செய்ய வலியுறுத்தியும் 29.07.2020 அன்று ஜாக்டோ ஜியோ சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து முறையீடு அளித்து அதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு அனுப்பும் போராட்டம் நடைபெற்றது.

## தென்சென்னை



மாவட்ட தலைவர் டேனியல் ஜெயசிங் செயலாளர் வினோத் குமார் வடசென்னை மாவட்ட தலைவர் பி.சுந்தரம்மாள் செயலாளர் அந்தோணிசாமி ஆசிரியர் சங்க நிர்வாகிகள் சென்னை மாவட்ட அமைப்பாளர் சாந்தகுமார், சீனிவாசன், தமிழ்வாணன், கங்காதரன், தண்டபாணி, பக்தவச்சலம் ஆகியோர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட கல்வி அலுவலர், மண்டல கல்லூரி இணை இயக்குனர் ஆகியோரிடம் முறையீடு செய்தனர்.

## நாகை

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அ.தி.அன்பழகன், பா.ரவி, சரவணன், எம்.காந்தி,



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் து.இளவரசன், துறைவாரி சங்க நிர்வாகிகள் ப.அந்துவன்சேரல், பா.ராணி, தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பார்த்தசாரதி, பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பின் பாலசுப்பிரமணியன், தமிழக ஆசிரியர் கூட்டணியின் செந்தில்நாதன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழக தலைவர்கள் செங்குட்டுவன், புஷ்பராஜ், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் ரமேஷ் உள்ளிட்டோர் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இந்துமதி அவர்களையும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரையும் நேரில் சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்ற அரசுக்கு பரிந்துரைக்க வேண்டி முறையீடு அளித்தனர்.



## நீலகிரி

ஜாக்டோ- ஜியோ மாநில ஒருங்கிணைப்பு உயர்மட்ட குழு உறுப்பினரும் அரசு ஊழியர் சங்க தலைவருமான முத்துக்குமார் தலைமையில் நீலகிரி மாவட்ட அரசு ஊழியர் சங்க செயலாளர் ஏ.ஆர். ஆலாரா, ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் கே.அன்பழகன், எஸ்.ரங்கன், தினகரன், சரவணகுமார், மாரியப்பன் ஆகியோர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நஸ்ருதீன் அவர்களை சந்தித்து முறையீட்டு மனுவை சமர்ப்பித்தனர்.

## கன்னியாகுமரி

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் மூலமாக கோரிக்கை மனு குமரி மாவட்ட ஒருங்கணைப்பாளர்கள் தியாகராஜன்,கனகராஜ், சிவசிறிரமேஷ், சந்திரசேகர் ஆகியோர் தலைமையில் வழங்கப்பட்டது. அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர்கள் ராஜ்குமார், கிறிஸ்டோபர், விஜயகுமார்,மூட்டா கலைவாணன், வினித், வேலவன், விமல் சங்கர், டொமினிக் பிரிட்டோ, ஜார்ஜ், எட்வின் பிரகாஷ், ராபர்ட்பாபு, நாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேனி



மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடமும், தேனி மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடமும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் இரா.ரெங்க ராஜன், பொ.அன்பழகன், சீ.நிலவழகன், த.இராமகிருட்டிணன், வ.செல்வம், செல்லத் துரை, கௌதம் அசோக்குமார், மலைச்சாமி, சந்திரன், இராஜவேல் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

## திருச்சி

மாவட்ட ஆட்சியர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் பள்ளி கல்லூரி கல்வி இணை இயக்குனர் ஆகியோர் மூலமாக தமிழக முதலமைச்சருக்கு முறையீட்டு மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜாக்டோ-ஜியோ திருச்சி மாவட்டஒருங்கிணைப்பாளர்கள் சந்திரசேகர், ஆரோக்கியராஜ், உதுமான் பழனிசாமி, மதனா, கிருஷ்ணகுமாரி, கே.எம்.ராஜேந்திரன், கே.பெரியசாமி மற்றும் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## இராணிப்பேட்டை



ஜாக்டோ ஜியோ மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜோசப் கென்னடி, கோ.மோகனமூர்த்தி, சிவராஜ் ஆகியோர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடம் முறையீடு அளித்தனர்.

## இராமநாதபுரம்



மாவட்ட ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக்குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சேகர், முருகேசன், குமார் ஆகியோர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிர்வாகிகள் முத்துமுருகன், சந்தானகிருஷ்ணன், தங்கமணி, பூப்பாண்டி, ஆரோக்கியசாமி, முனியசாமி, சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திருவண்ணாமலை



மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகத்தில், ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இரா.ஜோதி சங்கர், சி.அ.முருகன், சி.முருகன்,

அந்தோணிராஜ், மணி, பரிதிமாற்கலைஞன் ஆசிரியர் அமைப்பு நிர்வாகிகள் மற்றும் அரசு ஊழியர் சங்கங்களின் மாவட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

## கடலூர்



மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் பாக்கியராஜ், எல்.அரிகிருஷ்ணன், அம்பேத்கர், இளங்கோவன், சீனுவாசன், வாசுதேவன், விஜயப்பால், சுவாமிநாதன், டி.இரவிச்சந்திரன், பா.மகேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள், முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடத்தில் பெருந்திரள் முறையீடு மனு வழங்கப்பட்டது.

## வேலூர்



மாவட்ட வருவாய் அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர், மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் ஆகியோருக்கு ஜாக்டோ ஜியோ உயர்மட்ட குழு தலைவர்கள் பி.பேட்ரிக் ரெய்மண்ட், மா.ரவிச்சந்திரன் மாவட்ட வருவாய் அலுவலர் பார்த்திபன் அவர்களிடமும் முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் டி.ராஜன் அவர்களிடமும், கல்லூரி கல்வி இணை இயக்குநர் ஜி.எழிலன் அவர்களிடமும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் வேலூர் க.சரவணராஜ், எல்.மணி மாவட்ட உயர்மட்ட குழு உறுப்பினர்கள் ஜி.டி.பாபு, வாரா, எஸ்.ஜி.மோகன்குமார், ஜெயசீலன், மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் செ.நா.ஜனார்த்தனன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## காஞ்சிபுரம்



மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) அவர்களிடமும் காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சாமி.சத்தியமூர்த்தி அவர்களிடமும் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் முறையீட்டு மனு அளித்தனர். இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் வெ.லெனின், துறைவாரி சங்க நிர்வாகிகள் கியூரி, கி.குமரேசன், பாலமுருகன், த.குமரவேல், ஸ்டாலின், வடிவேல், இராம்பிரசாத், நாராயணசாமி, ரஜினிகாந்த் மற்றும் தேவராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கிருஷ்ணகிரி



ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பி.சந்திரன், ஆர்.நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, நந்தகுமார், தியோடர் ராபின்சன் தலைமையில் மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரை சந்தித்து முறையீடு அளித்தனர்.

## தருமபுரி

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குனர், மாவட்ட ஆட்சியர் மூலமாக தமிழக அரசுக்கு முறையீடுகள் அனுப்பப்பட்டன. இதில் வி.சுருளிநாதன், பி.எம்.கௌரன், தனராஜ், எம்.கோவிந்தசாமி,



அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ.சேகர், புகழேந்தி, இளவேனில், சி. காவேரி ஆகியோர் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திருவாரூர்

பெ.இரா.இரவி, வெ.சோமசுந்தரம், ஆர்.சிவகுரு ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களையும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரையும் சந்தித்து கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. இதில் அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் உ.சண்முகம், நிர்வாகிகள் எம்.ராஜமாணிக்கம், வி.சி.குமார், அ.தனபால், எம்.மோகன், சண்முகவடிவேல், தியாகராஜன், சக்திவேல், காளிமுத்து, வேலாயுதம், பாலசுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி

மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முறையீட்டு மனு அளிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழகத்தின் சேகர், தமிழ்நாடு முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் பிரான்சிஸ் ஹென்றி, வி. மாரிபாண்டி, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பவுல் ஆபிரகாம், குப்புசாமி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வெங்கடேசன், தே.முருகன், து. அண்ணாமலை பரமசிவன், பெ.கணேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

## செங்கல்பட்டு



காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சா.முகம்மது உசேன், சேகர், கே.டி.அனுக்குமார் ஆகியோரும் எம்.தாமோதரன், விக்டர் சுரேஷ்குமார், அ.பேபி, கே.கன்னியப்பன், கன்னியப்பன், கங்காதரன், வி.சீனுவாசன், வி.நாராயணசாமி, அ.மாயவன் ஆகியோர் பங்கேற்றனர்.

## திருப்பூர்



## கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை கல்வி அலுவலரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் சு.ரமேஷ், கே.மகாலிங்கம், ஏ.ரஹீம், வி.வில்வபதி, ஆனந்த கிருஷ்ணன், ஜி.கொளஞ்சி வேலு, ரவி, ஜி.வீரபுத்திரன், செந்தில் முருகன், சாமிதுரை, வேலு, வடிவேல், சுலைமான், குமாரதேவன், ரவிகுமார், கலாநிதி, சிவானந்த ராஜா, ஆ.லட்சுமிபதி, சத்தியமூர்த்தி, பி.சுரேஷ்குமார், ரவிச்சந்திரன், வி.ரவி, டி.சதீஷ், சி.அருள், சிவகுமார், கென்னடி, செல்வராசு, வெங்கடாசலபதி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ.பாஸ்கர்பாபு ஆசிரியர் அமைப்பு சார்பாக யூ.கே சண்முகம், ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் மற்றும் விஜயேந்திரன், சிவராமன் மற்றும் முன்னனி ஊழியர்கள் கலந்து கொண்டு கோரிக்கை கடிதத்தை மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரில் சந்தித்து வழங்கப்பட்டது.

# அரசு ஊழியர்களுக்கு கொரோனா நோய் தடுப்பு மாத்திரை வழங்கும் நிகழ்வு

## மதுரை

மாவட்ட TNGEA கொரனா பெருந்தொற்றை எதிர்கொள்ள முன்கள வீரர்களான அரசு ஊழியர்களுக்கு 3000 ஆர்சனிக் ஆல்பம் 30சி எனும் ஹோமியோபதி மாத்திரை வழங்கப்பட்டு குடும்ப உறுப்பினர்கள் சேர்த்து சுமார் 15000 பேர் பலனடைந்துள்ளனர்.



அதேபோல் ஊடகம் மற்றும் பத்திரிக்கை நிருபர்களுக்கு ஆர்சனிக் ஆல்பம் 30சி மாத்திரையும் முகக்கவசமும் வழங்கும் நிகழ்வு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தங்கவேல் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ஆ.செல்வம், மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி, மாவட்டத் தலைவர் ஜெ.மூர்த்தி, மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா மற்றும் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர்

மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆர்செனிக் ஆல்பம் 30சி மாத்திரை, கபசுரக் குடிநீர் பொடி மற்றும் கபசுரக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட தலைவர் இளங்கோவன் தலைமையில் 20.07.2020 அன்று நடைபெற்றது. இதனை மாவட்ட வருவாய் அலுவலர் இராஜேந்திர் தொடங்கி வைத்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் தெய்வநாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி கிறிஸ்டி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி கங்காதேவி, உதவி ஆணையர் (கலால்) திருமதி சோபா முன்னிலையில் நடைபற்ற இந்நிகழ்வுக்கு மாவட்ட செயலாளர் குமரிஅனந்தன் வரவேற்றார்.



நிகழ்ச்சியில் சித்த மருத்துவர் விஜயன், ஹோமியோபதி மருத்துவர் ராகுல்ஜி ஆகியோர் கோரோனா வைரஸ் நோயிலிருந்து பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேசினார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் பெ.ராஜராஜன், வி.கொளஞ்சி, சு.சரவணசாமி, முனைவர் கா.பால்பாண்டி, சி.சுப்பிரமணியன், துறைவாரி சங்க நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் பங்கேற்றனர். 200 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு கபசுரக் குடிநீர் பொடி, ஆர்செனிக் ஆல்பம் 30சி மாத்திரைகள் மற்றும் கபசுரக்குடிநீர் வழங்கப்பட்டது.

## விருதுநகர்

விருதுநகர் மாவட்ட மையம் சார்பில் இராஜபாளையம் வட்டக் கிளையில் நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கும் அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை திருமங்கலம் ஆர்சனிகம்



ஆல்பம்-30 கோவிட்-19 நோய் எதிர்ப்பு மருந்து மாத்திரை இலவசமாக வழங்கிய மாத்திரை 27.07.2020 அன்று காலை 11 மணி அளவில் வட்டக்கிளை செயலாளர் பொ.கருமலை தலைமையில் நடைபெற்றது. அனைத்து அலுவலகங்களிலும் வழங்கப்பட்டது. இதில் சங்க நிர்வாகிகள் கோவிந்தன், முருகன்செந்தில்வேல், கோபால், கா.கருப்பையா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தருமபுரி



நம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஆர்சனிக் ஆல்பம் 30 சி கப சுர சூரணம் நிலவேம்பு சூரணம் முகக் கவசம் வழங்கும் நிகழ்ச்சி 24.07.2020 அன்று காலை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் எஸ்.மலர்விழி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியரகம் மற்றும் நகரத்தில் உள்ள அலுவலகங்கள் 28.07.2020 அன்று கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி, அருர், மொரப்பூர், காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

## தஞ்சாவூர்



தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றும் அரசுசு ஊழியர்களுக்கு கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் முறையீடு



ஈரோடு



கரூர்



நெல்லை



சேலம்



விழுப்புரம்

# காலத்தை வென்ற தோழர் "ஆர்.எம்.எஸ்"

# மறக்க முடியா சில நினைவுக் குறிப்புகள்!

எவர் ஒருவரைப் பற்றி நினைத்தால் மனம் காற்றில் பறக்கும் இலையாக, கல்லில் செதுக்கும் சிலையாக மாறுகிறதோ அவரே அவனுள் உறையும் ஆசானாக, வழிகாட்டியாக இருக்க முடியும். என்னுடைய வாழ்நாளில் எனக்கு சவால்கள் ஏற்படும் போதெல்லாம் நான் நினைத்துக் கொள்ளும் வழிகாட்டியாக, ஆசானாக ஆர்.எம்.எஸ் இருந்து கொண்டிருக்கிறார், இருப்பார் என்று திடமாக நம்புகிறேன். நேற்றோ, போன மாதமோ, போன வருடமோ நாம் எடுத்த சில முடிவுகளை அதன்பிறகு நாமே மாற்றிக்கொள்ள நேர்ந்திருப்பதை உணரலாம். நம்முடைய பேச்சு, செயல், எண்ணங்கள் இம்மூன்றுக்கும் ஒத்திசைவை ஏற்படுத்துவதற்கு நாம் மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருக்கிறது. நினைப்பது ஒன்று, பேசுவது வேறு, செயல்படுவது இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டதாகி விடுவதை நாமே நம் வாழ்வில் பல தருணங்களில் உணரத் தலைப்பட்டிருக்கிறோம். தனிப்பட்ட வாழ்க்கையானாலும் சரி, தொழிற்சங்க நடவடிக்கை ஆனாலும் சரி தான் என்ன எண்ணினாரோ, அதையே பேசினார், எழுதினார், நடந்தும் காட்டினார் தோழர் ஆர்.எம்.எஸ் அவரை பக்கத்திலிருந்து பார்த்தவன், ரசித்தவன், வியந்தவன் என்கிற வகையில் நான் இதைச் சொல்கிறேன். மற்றவர்கள் கெஞ்சிக் கேட்டதனாலும், அவருடைய முடிவால் சிலருக்கு பாதகம் ஏற்படும் என்கிற நிலைகளில் மட்டுமே, பிறர் நலனுக்காக தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருக்கிறாரே தவிர, அவர் தன் தனிப்பட்ட கொள்கைகளை யாருக்காகவும் எதற்காகவும் தன் கடைசி மூச்சுவரை விட்டுக் கொடுக்க வில்லை. அவரைப் பற்றி சொல்ல வேண்டுமானால் பல அத்தியாயங்கள் சொல்லிக்கொண்டே போகலாம். நாள் கணக்கில் பேசலாம். அவரைப்பற்றி நினைத்தால் யுகங்கள் நொடிகளாக மாறும், இரத்தத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ஆக்ஸிஜனுக்கும் உற்சாகம் கூடும். இது அவருக்கு அருகில் இருந்து பழகியவர்களுக்கு மட்டுமே கிடைத்த அமுதம். அதில் நானும் ஒருவன் என்பதில் எனக்குப் பெருமிதம்.

யார் நல்லது செய்தாலும் பாராட்ட வேண்டும், யார் கெட்டது செய்தாலும் எதிர்த்துக் கேட்க வேண்டும் என்பது அவருடைய அடிப்படை கொள்கையாக இருந்தது. ஆட்சியில் யார் இருக்கிறார்கள், யார் இல்லை என்பதைப் பற்றியெல்லாம் அவர் எப்போதும் கவலைப்பட்டதில்லை. அரசுகள் தவறான முடிவுகள் எடுக்கும்போது அதை உடனடியாக எதிர்ப்பதும், மக்களுக்கு, அரசு ஊழியர் களுக்கு நல்லது செய்யும்போது உடனே பாராட்டுவதும் அவர் குணமாக இருந்தது. அவரிடம் ஒரு பெருங்கவலை இருந்தது. பெரும்பான்மையான கட்சிகள் ஊழலுக்கும் தங்கள் சுயநலன்களுக்காகவே மட்டும் செயல்படுவதும், மக்களைப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளாமலிருப்பதும் அவருடைய வேதனையாக இருந்தது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வாக்களிக்கும் உரிமை இந்த மக்களுக்கு இல்லாமல் போயிருந்தால் இப்போது கிடைக்கும் சில உரிமைகள் கூட கிடைக்காமல் போயிருக்கும் என்பார். தேர்தலை மனதில் கொண்டுதான் அரசியல் கட்சிகள் திட்டங்களை அறிவிக்கிறது என்றாகிப் போன நிலையில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை என இந்தியத் தேர்தலை மாற்றிவிட்டால் இன்னும் கூட ஏழை எளிய மக்களுக்கு சில உரிமைகளும் சலுகைகளும் கிடைக்கலாம் என்பார். ஊழலற்ற சமத்துவ ஆட்சியை கொண்டுவருவதற்கு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஆனால் பிரச்சார வலிமை, அரியணை சுகம், மக்களின் பரவலான அறியாமை, படித்தவர்களின் மெத்தனம், அறிவுள்ளோரின் துணிவின்மையே ஊழல்வாதிகள் இந்த நாட்டை பாழ்படுத்துவதற்கு உதவியாக உள்ளது என்பார்.

இன்று கொரோனாவுக்காக அரசு மருத்துவமனைகள் மற்றும் அதற்கென அமைக்கப்பட்டுள்ள மையங்கள் மூலம் மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுவதாக சுகாதார அமைச்சரும், முதல்வரும் கூறுகிறார்கள். ஆனால் தமிழக அமைச்சர்களுக்கோ, எம்.எல்.ஏ.க்களுக்கோ கொரோனா தொற்று ஏற்பட்டால் அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்கிறார்கள். அப்படியானால், முதல்வரும், சுகாதார அமைச்சரும் கூறும் சிறப்பான சிகிச்சை என்பது எப்படியிருக்கும் என்று மக்கள் யோசிக் கிறார்கள். ஒரு தன்னிகரில்லாத் தலைவன் என்பவன் மக்களோடு பயணிக்க வேண்டும். ஒரு அரசு ஊழியராக, தொழிற்சங்க வாதியாக, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய தோழர் ஆர்.எம்.எஸ் தான் நோய்வாய்ப்பட்டிருந்த நிலை யிலும் தனியார் மருத்துவமனையை நாடிச் சென்றதில்லை. அவர் சிகிச்சை பெற்ற இடம் அரசு மருத்துவமனைதான். எத்தனை விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும் சென்றாலும் தலைவனுக்குரிய தனி மரியாதையுடன் தான் நடத்தப் படுவதை விரும்பாதவர் தோழர் ஆர்.எம்.எஸ் அனைத்து ஊழியர்களை/தொழிலாளர்களைப் போல சமபந்தியில் அமர்ந்து உணவருந்துவதையே அவர் தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தார். ஊருக்குதான் உபதேசம் என்றில்லாமல், உலகத்தோர் அனைவருக்கும் உதாரண புருஷராக தோழர் ஆர்.எம்.எஸ் திகழ்ந்தார் என்பதற்கு இந்த ஒரு சான்றும் அவர் தன் மரணத்திற்கு பிறகு தன்னுடைய உடலையே அரசுக்கு தானமாக வழங்கிய மேன்மையுமே

போதும். ஒரு தலைவன் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக மாறிப்போனவர் தோழர் ஆர்.எம்.எஸ்.

தோழர் ஆர்.எம்.எஸ் ஒரு தொழிற்சங்கவாதியாக இருந்தாலும் அவர் தொழிலாளர்களை மட்டும் நேசிக்க வில்லை. இந்திய நாட்டுமக்கள் அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்று தலைமுறை களைத் தாண்டி யோசித்தவர். தன் மீதான எந்த புகழ்ச்சியை யும் மண்டைக்குள் ஏற்றிக்கொள்ளாமல் ஒரு காதில் வாங்கி அதே காதில் விட்டுவிட்டு அடுத்தடுத்த வேலைகளுக்குள் ஆழ்ந்துவிடக்கூடிய ஆளுமை ஒவ்வொரு தொழிற்சங்க வாதிக்கும், சங்க நிர்வாகிகளுக்கும் இருக்க வேண்டிய ஒன்று. தன் மீது எழுப்பப்படும் தனிப்பட்ட விமர்சனங் களாகட்டும், பாராட்டுக் கணைகளாகட்டும், வீசப்படும் வசைகளாகட்டும் அவைபற்றி எந்த சலனமும் இல்லாமல் கடந்து போன அவருடைய ஞானம் சங்கவாதிகள் கடைபிடிக்க வேண்டிய குணமாகும். போராட்டக்களங்களில் வந்துவிழும் அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சூரியப் பிழம்புகளாக வந்து விழுவதை அவருடன் இருந்தவர்களும் அவர் பேச்சைக் கேட்டவர்களும் அறிவர். அதிகார வர்க்கத்தின், அரசாங்கங்களின், தொழிலாளர் மற்றும் ஊழியர் விரோதப்போக்கை பொதுமேடைகளில் கிழித்து தொங்கவிடும் போர்க்குணம் நாம் ஒவ்வொருவரும் அவரிடமிருந்து கற்க வேண்டிய பாடம்.

அரசு ஊழியர்களுக்கான இயக்கத்தின் தலைவராக இருந்தவர்தான் அவர். ஆனால் அவர் பல நேரங்களில் உட்கார்ந்திருந்ததோ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய அலுவலக வராண்டாவில் போடப்பட்டிருந்த பெஞ்சில்தான். மற்ற தலைவர்களைப் போல பந்தா காட்டி கொள்ளாத மனிதர். உறுப்பினரோ, ஊழியரோ அவரை பார்க்க அவரிடம் பேச அனுமதி கேட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. தனக்குத் தெரிந்தது எல்லோருக்கும் தெரியட்டும் என்ற தத்துவார்த்தம் அவருடையது. அவர் மாநில மைய அலுவலகத்தில் இருக்கும் போது யார் வேண்டுமானாலும் அவரிடம் பேசலாம் சிலாகிக்கலாம். தலைவன், தொண்டன் என்ற அரசியல் கட்சி வேறுபாடுக ளின்றி ஒரு சமத்துவ சங்கத்தை கட்டமைத்துக் காப்பாற்றி யவர் அவர். அவர் ஒரு தங்கச் சுரங்கம். அவரிடம் இருந்து பல தலைவலர்களும் நிர்வாகிகளும் தங்களுக்குத் தேவையானதை அள்ளிச் சென்றார்கள். பொதுநலனுக்காக பலரும் சுயநலனுக்காக சிலரும் அவருடைய அனுபவத்தை உபயோகித்துக் கொண்டார்கள். பலபேர் அந்தத் தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கத்தை அள்ளியபோது சிதறிய துகள்களை நான் பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்கிறேன். அதை இந்த இயக்கத்திற்காக பயன்படுத்தி வருகிறேன். ஆண்ட கட்சி, ஆளும் கட்சி, ஆளப்போகும் கட்சி, என எந்த கட்சிகள் மீதும் நேர்மையாக விமர்சனம் செய்ய முடியாத இன்றைய சூழ்நிலையில் இந்த இயக்கத்தை வளர்ப்பதும் உரிமைகளை மீட்பதும், அவற்றைக் காப்பதும் சாதாரண பொறுப்பல்ல என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். சங்கத்திற்கோ, தனிப்பட்ட முறையிலே சவால்கள் வரும் போது அவற்றை எதிர்கொள்ள தோழர் ஆர்.எம்.எஸ்உடன் இருந்த அனுபவங்களும் அவர் சொல்லிக்கொடுத்த பாடங்களும் எனக்கு உறுதுணையாக இருக்கின்றன.

இந்த கொரோனா காலத்தில் அரசு ஊழியர்கள் சவாலான பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பல ஊழியர்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாக வேண்டிய அச்சம் இருந்தாலும் பொதுமக்கள் நலன்காக்க தன்னல மற்ற தங்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சமுதாயத்தை காக்கும் போராட்டத்தில் அவர்கள் தங்கள் சொந்த குடும்பங்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் இன்று மருத்துவ வல்லுநர்கள் உள்ளிட்ட உலகளவில் தெரிவித்து வரும் கருத்து இனி மனித சமூகம் வைரசோடு வாழ கற்றுக் கொள்ள வேண்டும் என்பது நம்மைப் பொறுத்தவரை வைசரோடு வாழ மட்டுமல்ல போராடவும் கற்றுக் கொள்ள வேண்டிய தருணம் இது என்று தோழர் ஆர்.எம்.எஸ் அடிக்கடி சொல்லும் கருத்துதான் நினைவுக்கு வருகிறது. ''வாழ்க்கை போராட்டத்தில் கொள்கைப் போராட்டத்தை மறந்துவிடக் கூடாது.'' அவருடைய அந்த வார்த்தைகள் எத்தனை பெரிய சவால்களையும் எதிர்த்து நின்று நம்மை வெற்றி பெற வைக்கும் என்பதில் ஐயமில்லை. ஆர்.எம்.எஸ்வாழ்க்கை பயணம் முழுக்க முழுக்க அரசு ஊழியர் மற்றும் தொழிலாளர் சமுதாயத்திற்கானது. காலத்தை வென்ற தலைவர்களில் ஒருவராக தோழர் ஆர்.எம்.எஸ் எப்போதும் இருப்பார். அவரின் மறக்க முடியா இந்த நினைவுகள் என்னையும் போல எல்லோரையும் உத்வேகப்படுத்தும்.

## எம்மோடு நீ இருப்பாய் தோழா!

ஒவ்வொரு போராட்டமும் உன்
போர்க் குணத்தை ஞாபகமூட்டும்!

ஒவ்வொரு உரிமையும் உன்
வியர்வைத் துளிகளை ஞாபகமூட்டும்!

ஒவ்வொரு வெற்றியும் உன்
ஓயா உழைப்பினை ஞாபகமூட்டும்!

ஒவ்வொரு தோல்வியும் உன்
உயிர் வலிமை ஞாபகமூட்டும்!

ஒவ்வொரு நினைவு தினமும்
எங்களைச் செதுக்கிய உன்
வார்த்தை உளிகளை ஞாபகமூட்டும்!

திரிகளின்றி தீ மூட்டிய
உன் கோபக் கனலோடு
உரிமைகளை என்றும் காத்திடுவோம்
எம்மோடு நீயிருக்கும் நினைவோடு!

- மு.அ.

# தோழர் ஆர்.எம்.எஸ். 3ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

## நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் தோழர் ஆர்.முத்துசுந்தரம் அவர்களுக்கு மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டமும், சமீபத்தில் மறைந்த முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினரும், தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளருமான பாவலர் க.மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு நினைவஞ்சலி கூட்டமும் ஜாக்டோ ஜியோ சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அ.தி.அன்பழகன், பா.ரவி, சரவணன் தலைமையில் நடைபெற்றது.



துறைவாரி சங்க நிர்வாகிகள் ப.அந்துவன்சேரல், தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் வி.பாலசுப்பிரமணியன், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பார்த்தசாரதி, பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பின் பாலசுப்பிரமணியன், தமிழக ஆசிரியர் கூட்டணி செந்தில்நாதன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் புஷ்பராஜ், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் ரமேஷ் மற்றும் நாகை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலரும் க.மீனாட்சிசுந்தரம் அவர்களின் மகனுமான க.மீ.செல்வகுமார் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் நிறைவுரை ஆற்றினார். இறுதியாக எம்.காந்தி நன்றியுரையாற்றினார்.

## கிருஷ்ணகிரி

29.07.2020 அன்று சங்க அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் சந்திரன் தலைமை தாங்கினார். தோழர் ஆர்எம்எஸ் அவர்களின் புகைப்படத்திற்கு வந்திருந்த அனைத்து தோழர்களும் மலரஞ்சலியும் வீரவணக்கமும் தெரிவித்தபின், வெங்கடேசன், வி.திம்மராஜ், முருகேசன், முருகன், மஞ்சுளா ஆகியோர் அவரது நினைவுகளைப் பகிர்ந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினர். மாவட்ட



செயலாளர் நடராஜன், சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் சந்திரசேகரன் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். இதில் மாவட்ட, வட்டக்கிளை, மகளிர் துணைக்குழு, முன்னணி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## திருவாரூர்

நினைவேந்தல் கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம் தலைமையேற்றார். மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் மாநிலச் செயலாளர் உ.சண்முகம், முன்னாள் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

## கரூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வு மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம், மாவட்ட நிர்வாகிகள் வ.கோபி, கே.இலட்சுமணன், பி.மேனகா, எம்.செல்வராணி, பி.பழனிச்சாமி, எல்.பாலசுப்பிரமணி, எஸ்.சுரேஷ்குமார், பிரேம்குமார், அ.சங்கர், கே.அறிவழகன், சந்திரசேகரன், ருக்மாங்கதன், பிரணவ் ஆகியோர் பங்கேற்று தோழர் ஆர்.எம்.எஸ். திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மெழுகுவர்த்தி ஏந்தி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வுடன் கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த கடலூர்



மாவட்ட வருவாய் வட்டாட்சியர் கவியரசு அவர்களின் திருவுருவப் படத்திற்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சேலம்



## தஞ்சாவூர்




## திருப்பூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு மாவட்டத் தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வி.பாலசுப்பிரமணியன் நிர்வாகிகள் ராமன் ஜி.திலீப், ரீட்டர், ராணி, ஜெகதீஸ்வரன் மற்றும் சந்திரகுமார் பாலமுருகன் மற்றும் முன்னணி தோழர்களும் பங்கேற்றனர்.



## ஈரோடு

தோழர் ஆர்.எம்.எஸ். 3ஆம் ஆண்டு நினைவாக ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், வட்டார வேளாண்மை துறை அலுவலகம், காதி அலுவலகம் ஆகிய இடங்களில் நோய் எதிர்ப்பு சக்தி மருந்தான ஆர்சனிக் ஆல்பம் 36சி ஹோமி யோபதி மாத்திரை அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## பாடல்..'அ' னா 'ஆ' வன்னா.. திரைமெட்டு

'பா' னா 'ஜ' வான்னா
'க' னா 'கா' வன்னா
'வி' னா காவியன்னா
பாஜக காவியன்னா

அன்று சொன்ன வாக்கென்ன
இன்று செய்யும் செயலென்ன
சுயசார்பு என்றால்
மொத்த விற்பனை தானன்றோ

தீயாய் பொய்யை பற்ற வைத்து
சாயம் வெளுத்தது இன்றல்லோ
நியாயம் இலாமல் பொதுத்துறை விற்பது
ஆலயம் இடிப்பதற் கொப்பன்றோ.. (அன்று)

பொன் முட்டை வாத்தை
கண்முன்னே அறுக்கும்
கொடுமை கண்டு பொறுக்கலாமோ
விண்முட்டும் வேலை இல்லாக் கொடுமை
கண்டும் கோபம் வரவில்லையோ

அன்று பொய்யை விதைத்தே
இன்று மெய்யாய் ஏமாற்றும்
இந்த மோடி சர்க்காரை
விரட்ட வியூகம் வகுப்போமே.. (அன்று)

பாடப் புத்தகம் பிஞ்சு மனங்களில்
நஞ்சை விதைப்பது மோடியன்றோ
கொஞ்சம் உள்ள திருக்குறள் சிலம்பு
வஞ்சமாய் நீக்கல் கேடன்றோ

சாதீய அமைப்பு
மதவாத பாடங்கள்
ஓதும் புதிய கல்வி
தீது விதைக்கும் பள்ளி.. (அன்று)

பகுத்தறிவாலே அறிவுத் தெளிவு
கூடாதென்பது பாசிசமே
பெரியார் பற்றிய பாடம் நீக்கல்
சிறியர் செயலே சகிக்கலையே

வேதம் புராணம்
பாடம் ஓதும் செயலே
தீது நிறைந்த
மூடத்தனங்கள் தானே.. (அன்று)

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம்
எவரும் அறிந்த ஒன்றல்லோ
பொதுத்துறை காக்க வேலை கிடைக்க
பொதுவில் திரண்டு வெல்வோமே

பாடம் திருத்தும்
வரலாறும் மாற்றும்
மனித விரோதம்
எதிர்க்க சபதம் ஏற்போம்.. (அன்று)

**- பெரணமல்லூர் சேகரன்**

# மக்களால் ஏற்பட்ட 1942 ஆகஸ்டு புரட்சி மக்களுக்கான புரட்சியாக அமையவில்லை

**74**வது சுதந்திர தினத்தை கொண்டாடவிருக்கிற நாம் புரட்சி தோன்றிய நாளை கொண்டாட மறுக்கிறோம். நாட்டில் இன்று ஏழ்மை ஏற்றத் தாழ்வு, வேலையின்மை, எழுத்தறிவின்மை, கொத்தடிமைமுறை ஆகியவையே நடைமுறையாக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்கும் கீழே - மனித தன்மைக்கும் கீழே - வாழ கூடியவர்கள் சதவீதத்தை குறைவாக தோற்றத்தை ஏற்படுத்தவே ஒரு நாளைக்கு கிராம புறத்தில வசிப்பவர் ரூ.32, நகர் புறத்தில் வசிப்பவர் ரூ. 47க்கும் கீழ் வருமானம் ஈட்டகூடியவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்ற ஏற்பாட்டை மத்திய அரசு மேற்கொள்கிறது.

அதிகாரமும், செல்வமும் மென்மேலும் ஒரே மையத்தில் குவிந்து வருகின்றன. காந்திஜியின் பரவல்முறை - மாநாடு - கருத்தரங்குகளின் பேச்சோடு நின்றுவிடுகின்றது. இந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் காந்திஜியால்கூட சாதிக்க முடியாத அளவிற்கு சுபாஸ் சந்திரபோஸ் இந்திய தேசிய ராணுவத்தில் நடைமுறையில் சாதித்துக் காட்டினார். ஆனால் ஆட்சியாளர் ஏழ்மையை - வேலை இன்மையை - தனியார் மய கொள்கையை வேகமாகப் பரவலாக்கி வருகின்றனர். நாடு இதுவரை கண்டிராத அளவிற்கு கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகள் மூன்றை லட்சம் பேர் இறந்துள்ளார்கள். விவசாய நெருக்கடியின் தாக்கமும் உணரப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளில் 45 ஆண்டுகள் இல்லாத வேலையிழப்பு நடந்துள்ளது. கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் கடுமையான பின்னடைவு (உதாரணமாக படித்த இளைஞர்கள 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்கிறார்கள்) ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரங்களின் மீதம், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் கடும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளது. கலாச்சாரம், பண்பாடு, அரசியல், சமூகம் ஆகியவற்றின் அடிப்படை கட்டுமானங்கள் மீது வெறித்தனமான தாக்குதல்கள் மத்திய, மாநில சர்க்காரால்



உரிமைகள் மீதும் தொழிலாளிகளின் உரிமைகள் மீதும் ஆட்சியாளர்களை தாண்டி நீதிமன்றங்களின் தலையீடும் வரம்புகள் மீறியவையாக உள்ளன. ஊழல், அதிகார துஸ்பிரயோகம் எங்கும் நீக்கமற பரவி உள்ளன. ஆதனால் இன்றைய அரசியலில் ஊழல் ஒரு பெரிய பிரச்சினையாக இல்லை. சமுகத்தில் அங்கீகாரத்தைக் கூட அது பெற்றுவிட்டது. சாதாரண ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைப் பூர்த்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. இந்துத்துவா - பாகிஸ்தான்; எல்லையில் பதட்டம் என ஆட்சியாளர் புதுப்புது பிரச்சினைகளை உருவாக்கி அதிலிருந்து மக்கள் கவனம் திரும்பிவிடாமல் பார்த்துக் கொள்ள பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பல சாதனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

72% எழுத்தறிவு பெற்றிருக்கும் இந்த நாட்டில் தாய் மொழியில் கல்வி இல்லை. தாய் மொழியில் ஆட்சியில்லை. தாய் மொழியில் நீதி வழங்கப்படுவதில்லை. அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலத்தின் ஆதிக்கமே நிலைபெற்றிருக்கிறது. ஆங்கிலத்தை உபயோகிப்பவர்கள் சமுதாயத்தில் உயர்ந்தோராக உடமை வர்க்கத்தினராக, உயர் சாதியினராக, மேலை நாகரிகத்தினராக, புத்தி ஜீவிகளாக, அதிகாரவர்க்கத்தினராக இருக்கின்றனர். இந்திய மொழிகளை, தாய் மொழியை உபயோகிப்போர் சாதாரண மக்களாக, எழுத்தறிவு பெறாதவர்களாக, உடல் உழைப்பாளர்களாக, கிராமப்புற மக்களாக தாழ்த்தப்பட்டோர் மற்றும்

மலைசாதிப் பிரிவினராக இருக்கிறார்கள். நாம் சுதந்திர நாட்டில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் ஒரு கணம் எழத்தான் செய்கிறது.

உறுதியான கொள்கைப்பிடிப்பில்லாத அரசியல் கட்சிகளும் தலைவர்களும் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க இந்தப் பிரச்சினையையே பெரிதும் நம்பி இருக்கின்றனர். அரசியல் பொருளாதார பிரச்சினைகளை மற்றும் அவைகளுக்கான தீர்வுகளை மக்கள் முன் வைத்து, அதன் பேரில் பெரும்பான்மை ஆதரவைத் திரட்ட அரசியல் கட்சிகள் தயாராக இல்லை;. அதற்கு மாறாக வகுப்பு வாதத்தில் ஈடுபட்டு, அதன் முலம் பெரும்பான்மை ஆதரவைத் திரட்ட முயற்சிக்கின்றன. அவ்வாறு பெற்ற பெரும்பான்மையை தேர்தல் காலத்தில் அரசியல் பெரும்பான்மையாக மாற்றிவிட முயற்சிக்கின்றன. இன்றைய ஆளும் வர்க்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரம் பறிக்கப் பட்டாலன்றி, நாட்டிற்கு சமீப எதிர்காலத்தில் விமோசனமே இருக்காது. ஏழை - எளிய மற்றும் சாதாரண மக்கள் கையில் அதிகாரம் கிடைத்தால்தான் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளாவது பூர்த்தியாகும்.

1942-ல் ஆகஸ்ட் புரட்சி துவங்கியபோது புரட்சியில் ஈடுபட்டவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் "இந்தியாவை விட்டு - ஆட்சியை விட்டு வெளியேறு" என்று காந்திஜி அறைகூவல் விடுத்தார். அதற்கான வேலைத்திட்டமாக சுபாஸ் சந்திரபோஸ் "டெல்லி சலோ" (டெல்லியை நோக்கிப் புறப்படு) என்ற கோஷத்தைக் கொடுத்தார். புரட்சியின் விளைவாக கிடைத்த ஆட்சி அதிகாரங்கள் சமுகத்தில் மேல்தட்டு, சொகுசு பிரிவு ஆக்கிரமித்துக் கொண்டது. மீண்டும் அப்படி ஒரு போராட்டத்திற்கு மக்கள் தயாராக வேண்டிய கட்டாயம் இப்பொழுது. ஏற்பட்டிருக்கிறது. "ஆட்சியாளரே - நீங்கள் ஆண்டது போதும், மக்கள் மாண்டது போதும். இடத்தைக் காலி செய்யுங்கள்: ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ள இதோ மக்கள் வெள்ளம் டெல்லியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது." என்பதை கோஷமாக மட்டுமல்ல: நடைமுறையிலே செய்து காட்டினாலன்றி மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படாது: ஆகஸ்டு புரட்சியின் லட்சியமும் நிறைவேறாது.

**- மு. பாஸ்கரன்**

# இரங்கல் கூட்டம்



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் வருவாய் வட்டாட்சியர் திரு இ.கவியரசு அவர்கள் கடந்த 18.07.2020 அன்று சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவ கல்லூரியில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்ததை முன்னிட்டு 20.07.20 அன்று காலை கடலூர் மாவட்ட ஆட்சிதலைவர் வளாகத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் மற்றும் மாவட்ட பொருளாளர் டி. இரவிச்சந்திரன் உள்ளிட்ட மாவட்ட , வட்ட நிர்வாகிகளும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் பா.மகேஷ், மாவட்ட செயலாளர் திரு ஆறுமுகம், மற்றும் மாவட்ட பொருளாளர் ஜான்பிரிட்டோ மற்றும் மாவட்ட துணை தலைவர் ஆர்.ரெத்தினகுமரன் உள்ளிட்ட மாவட்ட, வட்ட நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், தமிழ்நாடு கிராம அலுவலர் சங்க நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு கிராம உதவியாளர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர் இறுதியில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில செயலாளர் சங்கரலிங்கம் இரங்கல் உரையாற்றினார். பின்பு மாவட்ட ஆட்சியரை சந்தித்து அரசு அறிவித்த கொரோனா பணியின் போது நோய் தொற்று ஏற்பட்டு மரணம் அடையும் அரசு அலுவலர்களுக்கான ரூ. 50 லட்சம் இழப்பீட்டு தொகை, குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை போன்றவற்றை வழங்க வேண்டுமென மனு கொடுத்து பேசப்பட்டது. மாவட்ட ஆட்சியர் செய்து தருவதாக உறுதியளித்தார்.

# சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020 பேரிடர் காலத்தின் சூறையாடல்

**கொ**ரோனா காலத்தில் மத்திய அரசாங்கம் செய்து வரும் அநியாயங்கள் மக்கள் விரோத நடவடிக்கைகள் கணக்கில் அடங்காது. மக்கள் வரிப் பணத்தில் உருவாக்கப் பட்ட ரயில்வே உள்ளிட்ட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு கொடுப்பது 'இயல்பான' ஒன்றாக மாறிப் போயுள்ளது. துண்டு துண்டாய் கொடுத்து மிகவும் சலித்து போன மோடி அரசு தேசத்தின் வளங்கள் அனைத்தையும் ஒரே சட்டத்தின் மூலம் அடகு வைக்க துணிந்து விட்டது. அதன் பெயர்தான் 'சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020' ஆகும் (Environment Impact Assessment-2020).

### ஐந்து திட்டங்கள்

- சூரியன் உதயமாகும் நிலம், இயற்கை அதிசயம் என குறிப்பிடப்படுகிற அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் 4 தேசியப் பூங்காக்கள் மற்றும் 7 வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன. 83.749 சதுர கி.மீ பரப்பளவு கொண்டதாகும். பன்முகத்தன்மை வாய்ந்த, பல்லுயிரி நெருக்கம் நிறைந்த அருணாசலப் பிரதேசத்தில் நெட்டாலின் ஹைட்ரோ பவர் திட்டத்திற்கு இக்காலத்தில் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. திபாங் ஆற்றில் 278 மீட்டர் உயரத்துக்கு அணை கட்ட ரூ.1,600 கோடி அனுமதிக்கப் பட்டு உள்ளது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டால் இந்தியாவிலேயே மிக உயரமான அணையாக இது இருக்கும். ஆனால் இந்த நீர் பரப்பின் உயர்வால் குடும்பங்களை இழக்கும் வன மக்களின் வாழ்வாதாரம் என்னவாகும்?
- அசாம் மாநிலத்தின் கோலாகட் மற்றும் நகா வோன் மாவட்டங்களில் அமைந்துள்ள தேசியப் பூங்கா காசிரங்கா வனவிலங்கு சரணாலயம் ஆகும். சுமார் நானூறு சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு விரிந்திருக்கும் இங்கு இந்தியாவின் பெருமைக்குரிய அரியவகை ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகங்கள் வசிக்கின்றன. பிரம்ம புத்திரா நதிப்படுகையில் உள்ள இந்த காடுகளில் உலகின் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களில் மூன்றில் இரண்டு பங்கு வசிக்கின்றன. இவை தவிர யானைகள், காட்டெரு மைகள், மான்கள் மற்றும் அரியவகைப் பறவையினங் களும் காசிரங்காவின் சிறப்பு அம்சமாகும். 1905ஆம் ஆண்டில் காசிரங்கா காட்டுப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் தேசியப் பூங்காவாக மாற்றப்பட்டது. 1985ஆம் ஆண்டில் இதனை உலக பண்பாட்டுச் சின்னமாக யுனெஸ்கோ அங்கீகாரம் செய்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இப்பகுதியில் யானைகள் காப்பகம் அருகில் நிலக்கரி சுரங்கத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் கஜுராஹோவிற்கு அருகில் அமைந்துள்ளது பண்ணா தேசியப் பூங்கா. இந்த வனவிலங்கு சரணாலயத்தில் அதிகம் புலிகளைக் காணலாம். பண்ணாகாட்டு பகுதியில் தான் மோடியின் முதல் நதிகள் இணைப்பு திட்டம் உருவானது. பண்ணா புலிகள் காப்பகத்தின் 4141 ஹெக்டேர் நிலங்கள் பறிக்கப்பட்டன. அதாவது 105 சதுர கிலோமீட்டர் பகுதி சூறையாடப்பட்டது. அப்போது எதிர்ப்பு கிளம்பியவுடன் இது மக்களுக்கு ஆதர வான திட்டம், இனி இங்கு எவ்வித சுரங்கப் பணிகளும் நடக்காது என மோடி அரசு சத்தியம் செய்தது. ஆனால் இப்போது இக்காடுகள் பகுதியில் வைரம் எடுப்பதற்கு கார்ப்பரேட் கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 650 கிமீ தூரம் கொண்ட பிட்ர்கனிகா சதுப்புநில காடு கள் நிறைந்த ஒடிசா மாநில சந்திரபிலா சுரங்கம் உள்ள வனப்பகுதியில் தாளபிரா II மற்றும் III நிலக்கரி சுரங்கம் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டு அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்திடம் சுரங்கத்தை உருவாக்கி இயக்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்கியது. பிடிஐ நிறுவனம் வெளியிட்ட செய்தியில், அதானி நிறுவனம், இச்சுரங்கம் மூலம் 12,000 கோடி வருமானம் ஈட்டும் என்று குறிப்பிட்டது. வனம் கொடூரமாக அழிக்கப்பட்டது. இது போதாதென இப்போது அதானி நிறுவனத்திற்கு அந்த நிலக்கரியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் மிகப்பெரிய திட்டத்திற்கும் மோடி அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- குஜராத் மாநிலத்தின், சௌராஷ்ட்டிர தீபகற்பத்தில், கிர் சோம்நாத் மாவட்டத்தில், உலகப் புகழ் பெற்ற ஆசிய சிங்கங்களுக்கான கிர் தேசியப் பூங்கா இந்தியாவில் மட்டுமல்லாது ஆசிய அளவில் தனித்தன்மை வாய்ந்தது. இது சிங்கங்களின் சரணாலயமாக உள்ளது. 1412 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இந்தக் காடுகளில் சிங்கங்கள், வங்கப் புலிகள், சிறுத்தைகள் உள்ளன. இந்த பகுதியையும் விட்டு வைக்கவில்லை மோடி அரசு. கிர்காடு களில் சுண்ணாம்புக்கல் எடுக்கும் திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இவைகளுக்கு யாரிடமும் அனுமதி பெறாமல் இருக்க மோடி அரசு கொண்டு வந்துள்ளது தான் EIA - 2020 ஆகும்.

### சூழலியல் சட்டம் 2006

இந்தியா மிகவும் வளம் மிக்க பன்முகத்தன்மை வாய்ந்த நிலபரப்பைக் கொண்டது. பசுமைக் காடுகள் நிறைந்த, 6

மாநிலங்களில் படர்ந்து செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும், Ever Green Forest என்றழைக்கப்படும் வடகிழக்கு மாநில பசுமைக் காடுகள், கிழக்குத் தொடர்ச்சி மலைகள், அதில் உள்ள கனிம வளங்கள், பல்லா யிரம் கிலோ மீட்டர் தூரம் கொண்ட கடற்கரைகள், 100க்கும் மேற்பட்ட ஆறுகள், சதுப்பு நில காடுகள், தக்காண பீடபூமி என வியத்தக வளங்களை கொண்ட நாடு. ஆனால் இந்த வளங்களை கொன்றழிக்க மோடி அரசு அலைகிறது. அதற்கு தடையான சட்டங்களை உடைத்து வருகிறது.

1972ம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித சூழல் குறித்த ஸ்டாக்ஹோம் மாநாடு பிரகடனத்தின்" அடிப்படையில், சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் அடிப்படைக் கடமை" (Fundamental Duty) என்பது 1976ல் கொண்டு வரப்பட்ட 42வது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில்தான் போபால்" துயரத்திற்குப் பிறகு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. 1994 ஆம் ஆண்டு முதல், இந்தியாவில் இந்த சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், தற்போது, 'சூழலியல் தாக்க மதிப்பீடு 2006' சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சுற்றுச்சூழல் சட்டமே பல குறைபாடுகளை கொண்டதுதான். இருப்பினும் ஒரு சில பாதுகாப்புகளாவது அதில் இருந்தன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் பசுமை தீர்ப்பாயம், உயர் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தலையீடுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஆனால் 2006 சட்டத்தை வலுவாக்கப் போகிறோம் என்ற பெயரில் மிகவும் ஆபத்தானதாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020 வந்துள்ளது. கொரோனா பாதிப்புள்ள இந்த சூழலில் கடந்த மார்ச் 23 ஆம் தேதி வரைவு அறிக்கையை தயாரித்து ஏப்ரல் 11 ஆம் தேதிக்குள் இதுகுறித்த கருத்துக்களை மக்கள் கூற வேண்டும் என மத்திய அரசு கூறியது. இதனிடையே தில்லி உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இது இந்திய நாடு முழுவதும் பாதிப்புகளை உருவாக்கும் வரைவு என்ப தால் 22 மாநில மொழிகளில் இதை மொழிபெயர்த்து 10 நாட்களில் வெளியிட வேண்டும் என உத்தரவிட்டு கருத்து சொல்லும் காலத்தை ஆகஸ்ட்11 வரை தள்ளி வைத்துள் ளது. ஆனால் இதுவரை மொழிபெயர்ப்பு பணி நடக்க வில்லை.

**சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை என்பது என்ன?**

அரசு திட்டங்கள் எனில் அரசும், தனியார் திட்டங்கள் எனில் அரசு அனுமதி பெற்ற தனியார் அமைப்புகளை வைத்தும் முதலில் சாத்திய கூறு அறிக்கையையும் (Fesibility Report) பின்பு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையையும் (Environment Impact Assessment Report) தயார் செய்து அதை திட்ட அமலாக்கம் நடைபெற வுள்ள மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் வெளியிட்டு 30 நாட்கள் மக்கள் கருத்துக்கு காத்திருந்து, பின்னர் உள்ளூர் மொழிகளில் கருத்து கேட்பு கூட்டத்திற்கு அறிவிப்பு செய்வர். பின்னர் பொதுமக்கள் கருத்துக்கேட்பு (Public Hearing) கூட்டம் நடத்தி மக்கள் கருத்துக்களை கேட்டு பின்புதான் அந்த திட்டம் அமலாக்கம் நடக்கும். இதில்கூட தனியார் நிறுவனங்கள் மக்களை ஏமாற்றுவது உண்டு.

உதாரணமாக 2014ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஒன்றியம் வேலிங்கிராயன் பேட்டை கிரா மத்தில் குட் எர்த் ஷிப் யார்டு என்ற கப்பல் கட்டும் தளம் துவக்க கருத்துக் கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்தது. ஆனால் அந்த தளத்துடன் ஒரு இரசாயன நிறுவனம் துவங்கும் செய்தியை மறைத்திருந் தனர். மேலும் அந்த கூட்டத்திற்காக வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயார் செய்திருந்தது அண்ணா பல்கலைக்கழகம். ஆனால் அப்போது அந்த பல்கலைக்கழகத்திற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துக் கொடுப்பதற்கான அனுமதியே இல்லை.

**சட்டப் பிரிவை மாற்றி வாழ்வை சூறையாடும் பயங்கரம்**

2006 ஆண்டு சட்டத்தில் பிரிவு ய என்பது மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி வாங்க வேண்டிய திட்டங்கள் என்றும், பிரிவு ட மாநில அரசுகளிடம் அனுமதி வாங்க வேண்டிய திட்டங்கள் என்றும் இருந்தது. ஆனால் இந்த இரண்டுக்கும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும், மக்கள் கருத்து கேட்பும் முக்கியம். ஆனால் 2020 சட்டத்தில் பிரிவுகள் ய மற்றும் ட என்பதை மாற்றி பிரிவுகள் A1, B1, B2 என மூன்றாக பகுத்துள்ளனர். இதில் B2 என்ற பகுதியில் வரும் திட்டங்களுக்கு எவ்வித சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அனுமதியும் தேவையில்லை என்று வகுத்திருப்பது மிகவும் ஆபத்தானதாகும். உதாரணமாக, B2 பகுதியில் பாதுகாப்புத் துறை, முக்கியத்துவம் வாய்ந்த துறைகள், மின்சார கம்பங்கள் அமைப்பது, 8 வழி, 4 வழி சாலைகள் அமைப்பது, ரயில் தண்டவாளங்கள் அமைப்பது, கேஸ் பைப் லைன்கள் அமைப்பது, சூரிய மின்சாரம் தயாரிப்பது, நச்சு வாயு நிறுவனங்கள் என வாழ்விட நிலங்களை, காடுகளை, விவசாய வயல்களை, ஆறுகளை, மலைகளை துளைத்துச் செல்லும் நேர்கோட்டு திட்டங்கள், கடலில் 15 கடல் மைல் தூரத்திற்கு அப்பால் வரும் எண்ணெய் நிறுவனங்கள் உள்ளிட்ட 40 வகையான திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல 2006 சட்டத்தின்படி கனிம வளங்களை வெட்டி எடுக்கும் சுரங்கங்களுக்கு 30 ஆண்டுகள் மட்டுமே அனுமதி (இதுவே அதிகம்). ஆனால் 2020 வரைவின்படி 50 ஆண்டுகள் என உயர்வு. அணை மற்றும் அணுசக்தி நிறுவனங்களுக்கு 10 வருட அனுமதி என்பது 15 வருடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இதர திட்டங்களுக்கு

5 ஆண்டுகள் என்பது 10 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் கொடுமையாக தற்போது சுற்றுச்சூழல் துறையின் அனுமதி இல்லாமல் நடந்துக் கொண்டிருக்கும் பல நிறுவனங்களுக்கு உடனடியாக அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் 15 உயிர்களைப் பறித்த, பல மக்களின் உடல் நலனை பாழ்படுத்திய காற்றையும் நீரையும் நஞ்சாக்கியுள்ள விசாகப்பட்டினத்தில் உள்ள எல்.ஜி பாலிமர்ஸ் என்ற நிறுவனமும் இதில் அடங்கும்.

**அழிக்கப்படும் மணல் திட்டுக்கள்**

அதேபோல் ஒரு திட்டம் துவங்க நிலம் வாங்கிய பிறகு, அனுமதி வாங்குவதற்கு முன்பே அந்த நிலத்தை சமதளமாக்கலாம் என்ற நுஐயு 2020 வரையறையும் மிகவும் ஆபத்தானது. தனது அதிகார பலத்தால் நிலங்களை வாங்கும் நிறுவனங்கள் விளை நிலங்களை அழித்து சமதளமாக்கலாம். அவர்களுக்கு காவல்துறை உதவி இருந்தால் போதும். அவர்கள் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் முன்பே பல பணிகளை செய்து முடிப்பர். இதில் மிகவும் ஆபத்தானவை கடற்கரையோரம் வரும் திட்டங்கள் தான். ஏனெனில் கடற்கரையை சார்ந்த மணல் திட்டுக்கள் (Sand dunes) சூழலியலுக்கு மிகவும் முக்கிய மானவை. இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்களைக் காப்பவை. இவைகளை அழித்த பின்பு அனுமதி வாங்கி என்ன செய்வது? கடலூர் அருகில் 20 ஆண்டுகளுக்கு முன்பு பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் உள்ள கடற்கரை மணல் திட்டுக்களை நாகார்ஜுனா என்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் அழித்த வரலாறு உண்டு. ஆனால் அந்த நிறுவனம் இன்று வரை பல்வேறு காரணங்களால் துவங்கப்படவில்லை என்பதும் அழிந்த மணல் திட்டுகள் சமதளமாய் நிற்பதும் கொடிய சோகம்.

**CSR நிதி**

மக்கள் வாழ்வாதாரத்தைப் பறித்து அமலாக்கப்படும் திட்டங்கள், அதனால் வாழ்விழந்த மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அங்கு செயல்படும் நிறுவனங்கள் அம்மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு செலவு செய்யும் தொகை CSR நிதி எனப்படும் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதி (Corporate Social Responsibility Fund). இது பெரு நிறுவனங்களின் பிச்சை அல்ல, அவர்களின் சமூகக் கடமை. அல்லது அதைப் பெற வேண்டியது வாழ்விழந்த மக்களின் உரிமை. அந்த அடிப்படையில் தான் தங்களது லாபத்தில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகையை நிறுவனங்கள் கிராம மக்களுக்கு செலவு செய்து வருகின்றன. உதாரணத்திற்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஆண்டுக்கு ரூ.1200 கோடி லாபம் அடைந்தால் அதிக பட்சம் 45 கோடியை இந்த வகையில் மக்களுக்கும் அவர்களுக்கான திட்டங்களுக்கும் செலவு செய்ய வேண்டும். ஆனால் நுஐயு 2020 வரைவுப்படி இதற்கும் ஆபத்து வந்துள்ளது. ஆண்டுக்காண்டு CSR நிதியை கூட கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தனது திட்ட வரைவின் போது ஒப்புக்கொள்ளும் நிதியை கொடுத்தால் போதும் என்ற நிலையை உருவாகி உள்ளது இந்த புதிய சட்ட வரைவு.

**வளரப்போகும் கட்டிடங்கள்**

இதுவரை 20,000 சதுர மீட்டருக்குள் மட்டுமே நிறுவனங்கள் கட்டிடங்களை கட்ட அனுமதி இருந்தது. அதற்கு மேல் கட்ட வேண்டுமெனில் சுற்றுச்சூழல் துறையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. ஆனால் இனி 1,50,000 சதுர மீட்டர் வரை அனுமதி இல்லாமல் கட்டிடங்களை கட்டிக்கொள்ளலாம் என்ற மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எந்த ஒரு நிறுவனமும் அனுமதி வாங்கிய அளவுக்கு மீறி தனது நிறுவனத்தை ஓர் அடி விரி வாக்கம் செய்ய வேண்டுமெனில் கூட முறையான அனுமதி வாங்க வேண்டுமென்பது இதுவரை இருக்கும் சட்டம். ஆனால் EIA 2020 இதையும் ஒழித்துக்கட்டுகிறது. அதாவது எந்த ஒரு நிறுவனமும் அல்லது திட்டமும் 50 சதம் வரை நுஐயு அனுமதி இல்லாமல் விரிவாக்கம் செய்து கொள்ளலாம். அதாவது 100 கிலோ மீட்டர் சாலைக்கு அனுமதி வாங்கி 150 கிலோ மீட்டர் போட்டுக் கொள்ளலாம். பின்பு அனுமதி வாங்கினால் போதும். இது எவ்வளவு அக்கிரமமானது!

**அரசியல் சட்டத்திற்கு எதிரானது**

குறிப்பாக கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சம், சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும் தொழிற்சாலைகளை எதிர்த்து சில அமைப்புகளும் தனி நபர்களும், அரசியல் இயக்கங்களும் நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன அல்லவா, இனி அது முடியாது! அதனைத் தடை செய்கிறது இந்த வரைவு. ஒரு நிறுவனத்தை எதிர்த்து குடிமைச் சமூகமோ, தனி நபர்களோ இனி நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாது. அரசு அமைப்புகள் மட்டுமே செல்ல முடியும் என்கிறது இந்த வரைவு. இது எவ்வளவு மோசமான ஆபத்து என்பதை நாம் உணர முடியும். மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவின் தலைவரையும், உறுப்பினர்களையும் மத்திய அரசே நியமிப்பது கூட்டுறவு கூட்டாட்சி தத்துவத்தைச் சவக்குழியில் தள்ளுவதற்கு சமமாகும்.

இந்திய அரசியல் சட்டத்தில் பிரிவு 51 A (9) ஒவ்வொரு குடிமகனுக்கும் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அடிப்படை கடமை என்று அறிவிக்கிறது. அப்படி எனில் சுற்றுச்சூழலை சூறையாடுவோரை எதிர்த்து கேள்வி கேட்கும் உரிமையை EIA 2020 பறிப்பது எப்படி சரியாகும்? மக்கள் வாழ்விடங்களை, வாழ்வாதாரங்களை பறிக்கும் திட்டங்களை எதிர்த்து கேள்வி கேட்கும் உரிமையை அல்லது மக்கள் கருத்து கேட்கும், சொல்லும் உரிமையை பறிப்பது எப்படி சரியாகும்? ஆக அரசியல் சட்டத்தின் அடிப்படையை கேள்வி கேட்கும் இந்த சட்டத்தை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

தொகுப்பு : **கோ.பழனியம்மாள்**

# அந்நிய முதலீடும் ஆபத்தில் இந்தியாவும்

**2014**-ல் ஆட்சியில் அமர்ந்த பாஜக அரசு மேக் இன் இந்தியா திட்டத்தை கொண்டுவந்தது. அதன் குறிக்கோள் என்னவென்றால் அந்நிய முதலீட்டின் மூலம் இந்தியாவில் உற்பத்தி செய்வது. இதன் மூலம் உலக முதலீட்டாளர்களை இந்தியா ஈர்த்தது. அமெரிக்காவையும் சைனாவையும் பின்னுக்குத் தள்ளி அந்நிய நேரடி முதலீடு செய்யக்கூடிய நாடாக இந்தியா 2015ல் மாறியதாக அறிவித்தாலும். இத்திட்டம் எதிர்பார்த்த அளவில் வெற்றிபெறாமல் தோல்வியில் முடிந்தது. ஏனென்றால் லாபம் ஈட்டிய முதலீட்டாளர்கள் தங்களது லாபத்தை சேமித்துக் கொண்டார்களே தவிர இந்தியாவில் முதலீடு செய்ய முன்வரவில்லை. காரணம் பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி, வங்கிகளின் வாராக்கடன் அதிகரிப்பு, நிறுவனங்களின் திவால் நிலை இதனால் ஏற்பட்ட பொருளாதாரம் சீர் குலைவு. எனவே இந்தியாவில் அந்நிய முதலீடு குறையத் தொடங்கியது. 2013-14 ம் ஆண்டில் 31.3 சதவிதமாக இருந்த அந்நிய முதலீடு 2017-18 28.06 சதவிதமாக குறைந்தது மேலும் 21.5 சதவிதமாக குறைந்தது. மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளாலும் திட்டத்தாலும் முதலீட்டாளர்கள் மீண்டும் இந்தியாவில் முதலீடு செய்வது குறைய ஆரம்பித்தது. கிரெடிட் ரேட்டிங் ஏஜென்சி இன் இண்டியா நடத்திய ஆய்வறிக்கையில் 2018-19 ல் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது என்றும் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவு 2019-20 ம் புதிய முதலீகள் குறைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது. தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துவந்த இலட்சக்கணக்கான மக்கள் வேலையிழந்து நடுத்தெருவிற்கு தள்ளப்பட்டனர். சரிந்துகொண்டிருக்கும் பொருளாதாரத்தை ஈடுசெய்வதற்காக தகப்பன் சேர்த்து வைத்த சொத்துக்களை தறுதலைப் பிள்ளை அழித்த கதையாக நாட்டு மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட பொதுத் துறை நிறுவனங்கள் அரசுத் துறைகள் அனைத்தும் தனியாருக்கு விற்கப்பட்டுவருகிறது.

புதிய முதலீட்டின் குறைவால் ஏற்பட்ட மந்தநிலைப் பொருளாதாரத்தை சீர்ப்படுத்தவும், முதலீட்டாளர்களை தன்பக்கம் ஈர்க்கவும் அவர்களுக்கு சாதகமாக பல தளர்வுகள் செய்யப்பட்டன. அதில் முக்கியமானது தொழிலாளர் சட்டங்களில் திருத்தம் செய்து தொழிலாளர்களின் நலனுக்கெதிராக செயல்பட்டுள்ளார்கள். பிறகு வரிவிதிப்பு சட்டத்திருத்தம் -2019ன்மூலம் நிதிச்சட்டம்-2019ம் வருமானவரிச் சட்டம் 1961ம் ஆகிய இரண்டையும் திருத்தி அவர்களுக்கு கார்ப்ரேட் வரிகள் 34.94 சதவீதமாக இருந்ததை 22 சதவீதமாக குறைத்தார்கள். அதுமட்டுமல்லாது ஈவுத் தொகை விநியோகவரியினை கம்பெனிகளுக்கு இரத்து செய்து பங்குதாரர்களுக்கு விதித்தார்கள். இதுபோன்ற பலதளர்வுகளை செய்திருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று சீன நாட்டின் வூகான் மாகாணத்தில் துவங்கி உலக நாடுகளில் முழுவதும் பரவக் காரணம் என சீனாவை குற்றம் சுமத்திய அமெரிக்க அதிபர் ட்ரம் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார். சீனநாட்டில் முதலீடு செய்திருந்த அமெரிக்க நிறுவனங்களை உடனே வெளியேறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சீனாவிலிருந்து வெளியேறும் அந்நிய முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக இந்தியாவில் தொழிலாளர்கள் நலனைப் பற்றி கவலைப்படாத ஒரு அரசாங்கம் இதற்கும் ஒருபடி மேலாக இயற்கை வளங்கள், கனிமவளங்கள், காற்று மாசு, வன மற்றும் அறிய உயிரினங்கள் அழிவு, கடல்வளங்கள் அழிவு, மண்வளம் நீர்வளம் மாசு அடைதல் என அனைத்துக்கும் ஊறுவிளைவிக்கும் சட்டதிருத்தத்தை முதலீட்டாளர்களுக்கு ஆதரவாக மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. இதன்படி கடலிலும், கடற்கரைக்கு வெளியிலும் தொடங்கப்படும் ப்ராஜக்டுகளை பி2 வகையில் கொண்டுவந்தது. பி2 வகை என்றால் சுற்று சூழல் தாக்க மதிப்பாய்வு-2006 ல் (Environment Impact Assessment Notifiction 2006) ஏ ப்ராஜக்ட் மற்றும் பி1 , பி2 திட்டங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஏ திட்டம் மத்திய அரசிடமும் பி1 திட்டம் மாநில அரசிடமும் ஒப்புதல் பெற வேண்டும். ஆனால் பி2 வில் உள்ள திட்டம் செயல்படுத்த மத்திய மாநில அரசுகளிடமும் குடிமக்களிடமும் ஒப்புதல் பெற தேவையில்லை. இதில் உள்ள

சூழ்ச்சியை புரிந்துகொண்ட தமிழக அரசும் 2020 பிப்பரவரி மாதம் நாகப்பட்டினம் தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய கடற்கரை மாவட்டங்கள் மற்றும் திருச்சி, கடலூர் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண்மண்டலமாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

சுற்று சூழல் தாக்க மதிப்பாய்வு இதில் திருத்தம் கொண்டுவந்தால் இதன் விளைவு எப்படியிருக்கும் என்றால் உதாரணமாக போபாலில் உள்ள யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் டிசம்பர் 3, 1984ல் மீத்தேல் ஐசோனைடு என்னும் நச்சுவாயு கசிவினால் உடனடியாக 2259 பேரும், அடுத்தடுத்த வாரங்களில் பதினாராயிரம் பேரும் உயிரிழந்தனர். உலகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் மிக அதிக பாதிப்பு ஏற்பட்ட நிகழ்வாக போபால் பேரழிவு உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கும் இன்றுவரை நிவாரணம் சரியாக கிடைக்கவில்லை. இந்நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரியும் அமெரிக்க குடிமகனுமான வாரன் ஆண்டர்சன் முதன்மை குற்றவாளியாக பதிவு செய்யப்பட்டாலும் அவர் இறக்கும் வரை அமெரிக்க அரசு அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க மறுத்தது. இச்சம்பவத்திற்குப் பிறகுதான் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம்-1986ல் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்திற்கு கீழ் தான் சுற்று சூழல் தாக்க மதிப்பாய்வு கொண்டுவரப்பட்டது. இப்படி சட்டங்கள் கொண்டுவரப்பட்டும் சமீபத்தில் விசாப்பட்டினத்தில் எல்ஜிபாலிமர்ஸ் நிறுவனத்தால் வெளியான நச்சுத்தண்மை கொண்ட ஸ்டைரின் வாய்வால் பதினொரு பேர் உயிரிழந்துள்ளனர். இதனால்தான் தளர்வுகள் கொண்டுவந்தால் பின்விளைவுகளின் தாக்கத்தை நம்மால் கற்பனை கூட செய்ய முடியவில்லை.

இவ்வாறான மிகமோசமான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட தவறுகளை சரிசெய்வதற்காகவும், புதிய அந்நிய முதலீட்டாளர்களுக்காகவும் தொழிலாளர்கள் மீதும் குடிமக்கள் மீதும் சுமத்தியிருந்த சுமையினை இந்த அரசு சூற்றுச் சுழல் மீதும் தற்போது சுமத்தி யிருக்கிறது. மத்திய அரசின் கொள்கைகள் இதோடு மட்டும் நில்லாமல் முதலாளித்துவத்திற்கு ஆதரவாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. அரசு ஊழியர்களாகிய நாம் நியாயமான கோரிக்கைகளுக்காவும் மட்டுமல்லாமல் உண்மையான தேச பக்தியுடன் இந்தியாவின் இயற்கை வளங்களையும், நாட்டின் குடிமக்களையும் காப்பாற்ற மக்களோடு ஒன்று சேர்ந்து போராடுவேண்டும்.

- **தெ.வாசுகி**

---

# வலுவிழக்கும் வங்கிச் சேவைப் பணி

**இ**ந்திய வரலாற்றில் 1969 ஜுலை 19 அன்று. அன்றைய பிரதமர் திருமதி.இந்திராகாந்தி 14 பெரிய தனியார் வங்கிகளை தேசியமயமாக்கி அறிவித்தார். அந்த அவசர சட்டத்தில் கையெழுத்திட்டவர் அப்போதைய குடியரசுத் தலைவர் திரு.வி.வி.கிரி ஆவார். இந்தியாவின் பெருமுதலாளிகள் வங்கிகள் தேசியமயமாக்கியதைக் கடுமையாக எதிர்த்தனர். நாடாளுமன்றத்தில் இந்திராவை ஹிட்லருடன் ஒப்பிட்டு பேசினார் ஜே.பி.கிருபளானி. அப்போதைய ஜனசங்கத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இருந்த வாஜ்பாய் நாடாளுமன்றக் கூட்டத்துக்கு முன்பே அவசரச் சட்டம் கொண்டு வந்ததைக் கேள்வி கேட்டார். சம்யுக்த சோசலிசக் கட்சிப் பிரதிநிதியாக, மது லிமாயி வங்கிகளின் நிர்வாகத்தில் ஊழியர்கள், சேமிப்பவர்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனப் பிரதிநிதிகள் வேண்டும் என்று சட்ட திருத்தம் கொண்டு வந்தார். இந்திரா அதனை ஏற்றுக்கொண்டார். நாடாளுமன்றத்தில் நீண்ட விவாதத்துக்குப் பின் ஆகஸ்ட் 4 மற்றும் 8 தேதிகளில் இரு சபைகளும் சட்டத்தை ஏற்றுக்கொண்டன.

இந்தச் சட்டத்தை எதிர்த்து ஆர்.சி.கூப்பரும் டி.எம்.குருமக்சாணியும் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை 12 நீதிபதிகள் கொண்ட குழு 34 நாட்கள் விசாரித்தது. பிரபல வழக்கறிஞர் நானி.ஆ.பல்கிவாலா இந்தச் சட்டத்தை எதிர்த்து வாதாடினார். அப்போதைய அட்டர்னி ஜெனரல் நிரன்தே அரசுக்காக வாதாடினார். இறுதியாக, வங்கிகள் தேசியமயமாக்கல் சட்டத்தை ஆமோதித்து பிப்ரவரி 10, 1970ல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## தேசியமயமாக்கத்தின் காரணம்

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் பின்னணியை இன்றைக்குத் திரும்பிப் பார்ப்பது அவசியம். ரிசர்வ்

வங்கியின் துணை ஆளுஞர் ஆர்.கே. கசாரி, 'தொழில் அதிபர்களின் ஆதிக்கத்திலிருந்து வங்கிகளை விடுதலை செய்யாதவரை இந்தியாவில் பொருளாதார ஆதிக்கம் ஒருசிலரின் கையில் மட்டும் இருப்பதை உடைக்க முடியாது" என்று 1967ல் திட்ட கமிஷனுக்கு அளித்த அறிக்கையில் கூறினார். 1960 முதல் 1966 வரை 78 முறை இடதுசாரிகள் வங்கிகளைத் தேசியமயமாக்கக் கோரி நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தனர். 1967, மே 26ல் நாடாளுமன்றம் கொள்வீளரிதியாகத் தேசிய மயமாக்கலை ஏற்றுக் கொண்டது.

1960ல் 328 வங்கிகள் இருந்தன. 1965ல் இவை 94 ஆகச் சுருங்கிவிட்டன. 1960ல் பாலா மத்திய வங்கி, லட்சுமி வணிக வங்கி ஆகியவை திவாலாகின. 1969ல் 8,262 வங்கி கிளைகள் மட்டுமே இருந்தன. 1966ல் மொத்த கடனில் 0.2% மட்டுமே விவசாயத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. 65,000 பேருக்கு 1 வங்கிக் கிளை என்ற வீதத்தில்தான் அப்போது இருந்தது. எனவே தேசியமயமாக்கலின் நோக்கங்களாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் வங்கிக் கிளைகளைப் பரவலாக்குதல், மக்கள் சேமிப்பை வங்கிகளுக்குக் கொண்டுவருதல், பின்தங்கிய மக்களுக்கும் சிறுகடன் பெறுபவர்களுக்கும் வங்கிக்கடன் கிடைக்கச் செய்வது, கடனை எடுத்துச் செல்வது. பெரும் தொழில் குடும்பங்கள் ஒரு சிலவற்றின் கைகளிலிருந்து வங்கிகளை விடுவித்தல், வங்கி நிர்வாகிகளுக்குச் சிறந்த சேவைக்கான நிர்வாகத் திறன் பயிற்சி தருதல், வங்கி ஊழியர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்தல் ஆகியவை முன்வைக்கப்பட்டன. லாபம் என்ற வார்த்தை எங்கும் இருக்கவில்லை. 1969 முதல் 1991 வரையுள்ள புள்ளிவிவரங்கள் இந்த நோக்கங்கள் அனைத்தும் வெற்றியடைந்ததைக் காட்டுகின்றன. வங்கிச் சேவை மேலும் அதிகரிக்க இருந்த சூழலில் அரசின் கொள்கைகள் தலையீடுகளால் 1991ல் ரிசர்வ் வங்கி புள்ளிவிவரப்படி மொத்தக் கடன்காரர்களில் 35.9% ரூ.2 லட்சத்துக்கும் குறைவான கடன் பெற்றிருந்தனர். ஆச்சரியம் என்னவென்றால் மொத்தக் கடனில் 99.3% ரூ.2 லட்சத்துக்கும் கீழ் வழங்கப்பட்டிருந்தது.

## அதிகரிக்கும் வாராக் கடன்கள்

அரசு பெரிய கடன்கள் வழங்க இருந்த விதிமுறைகளைத் தளர்த்தியது. ரிசர்வ் வங்கியும், அரசும் முன்னுரிமைக் கடன்களில் வீட்டுக்கடன், விவசாயம் சார்ந்த தொழில்களுக்கான கடன், நடுத்தரத் தொழில்களுக்கான கடன் என சேர்த்துச் சிறுகடன்கள் கிடைப்பதைக் குறைத்தன. கைகுலுக்கல் கொடுத்து பல்லாயிரம் ஊழியர்களையும் அதிகாரிகளையும் வீட்டுக்கு அனுப்பியது. 10 ஆண்டுகள் வேலைக்கு ஆட்கள் நியமனம் தடை செய்யப்பட்டது. வங்கிகள் பெரும் கடன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. இந்திய தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய தொழில் முதலீடு மற்றும் கடன் நிறுவனம், இந்திய வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள், சேமிப்புக்காக ஆரம்பித்த யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா ஆகியவை வங்கிகளாக மாற்றப்பட்டுத் தனியார்மயமாக்கப்பட்டன. பொதுத்துறை வங்கிகள் இந்திய வளர்ச்சி நிறுவனங்களின் பணிகளைச் செய்ய ஆரம்பித்தன. பெரும் கடன்கள் வாராக்கடன்கள் ஆகின. ரிசர்வ் வங்கியின் விதிமுறைப்படியே மீண்டும் கடன் கொடுத்தும் வாராக்கடன்கள் அதிகரிக்கத் தள்ளுபடி ஆரம்பமானது. வங்கிகள் நஷ்டத்துக்குச் சென்றன.

நாடாளுமன்ற நிலைக்குழு வாராக்கடன்களை வசூல் செய்ய வழி முறைகளைப் பரிந்துரை செய்தது. அரசு இதனை கண்டுகொள்ளவில்லை. விளைவு ரூ.7 லட்சம் கோடி வாராக்கடன். இவற்றில் 86% பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கப்பட்டதே. 2016 மார்ச் ரிசர்வ் வங்கி அறிக்கைப்படி பார்த்தால் மக்கள்தொகை 132 கோடியில் 10 வயதுக்கு உட்பட்ட 39மூ பேரை விலகி விட்டுப் பார்த்தால்கூட வெறும் 19% பேருக்கே வங்கிக் கடன் கிடைக்கிறது. 81% மக்களுக்கு வங்கிக்கடன் கிடைப்பதில்லை. ரூபாய் 100 கோடிக்கு மேல் பெற்ற கடன் மொத்த கடனில் 36.18% ரூ. 2 லட்சத்துக்குக் கீழ் கடன் பெற்றுள்ளவர்கள், பெற்ற கடன் வெறும் 6.9% மட்டுமே. எனவே தான், விவசாயிகள் சாகிறார்கள், வியாபாரிகள் தவிக்கிறார்கள். மாணவர்களுக்குக் கல்விக் கடன் இல்லை. பொதுத்துறை வங்கிகள்தான் உடல் எங்கும் குருதியை கொண்டு சேர்க்கும் இதயம் போன்று இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் ரத்த நாளங்கள் போல் கிளைகளைக் கொண்டுசென்று சேவை செய்பவை. எனவே, பொதுத்துறை வங்கிகளை பாது காப்போம். மக்கள் சேவையே அவற்றின் நோக்கம்.

இந்நிலையில் மேலும் 01.04.2020 அன்று ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ், யூனைடேட் பேங்க் ஆகியவை பஞ்சாப் நேசனல் வங்கியுடனும், சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடனும், ஆந்திரா வங்கி மற்றும் கார்ப்பரேசன் வங்கி யூனியன் பேங்க் ஆப் இந்தியாவுடனும், அலகாபாத் வங்கி இந்தியன் வங்கியுடனும் இணைக்கப்பட்டன. இதனால் கிராமப்புறம் வரை கிடைத்து வந்த வங்கிச் சேவை இனி கிடைக்காது. வங்கிகளின் இணைப்பால் ஊழியர்களின் பணி மூப்பு, பதவி உயர்வு பிரச்சனைக்குள்ளாகும். காகிதமில்லா பணப்பரிவர்த்தனையை நோக்கி இந்தியா செல்லும். ஒட்டு மொத்தத்தில் பாதிக்கப்படபோவது அப்பாவி ஏழைகளும், வங்கி ஊழியர்களும்தான்.

- **இரா.மங்களபாண்டியன்**

# கொரோனாவும் வேலையின்மையும்

கோவிட்19 தொற்று உலகளாவிய அளவில் ஏற்பட்ட சுகாதாரம் மற்றும் உடல்நல பாதிப்பு மட்டுமல்ல தொழிலாளர்களையும் இளைஞர்களையும் அவர்களைத் தொடர்ந்து பொருளாதாரத்தையும் மிகத் தீவிரமாக பாதித்துள்ளது. உலகம் முழுவதும் வரலாறு காணாத வகையில் பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது. உலக மக்கள் பல நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள்.

இந்தியாவை பொருத்தமட்டில் திடீரென அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தால் பல கோடி மக்கள் சொல்ல முடியாத இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். வேலையின்மை அதிகரித்துள்ளது. பொருளாதாரமும் முடக்கப்பட்டதால் பல கோடி மக்கள் வேலை இன்றி தவிக்கிறார்கள். ஊதியப் பிடித்தம், ஆட்குறைப்பு, ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குதல், ஊழியர்களை தானாக ராஜினாமா செய்ய வற்புறுத்துதல் போன்ற செயல்களை தனியார் நிறுவனங்கள் செயல்படுத்தி வருகின்றன.

கோவிட்19 காரணமாக வீட்டிலிருந்தே பணிபுரியும் ஊழியர்களை பல நிறுவனங்கள் காலவரையறை எதுவுமே இல்லாமல் பணிபுரிய செய்கிறார்கள். ஆனால் அதிக ஊதியம் கொடுக்காமல் 15% முதல் 50% வரை ஊதியத்தை குறைக்கிறார்கள். 144 தடைச் சட்டம், கோவிட்19ஐ காரணம் காட்டி ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதும், ஊதியத்தை குறைப்பதும், நெருக்கடியை உருவாக்குவதும் ஊழியர்களின் நிதி ஆதாரத்தை அழித்து அவர்களை மனதளவில் பாதிக்கும் நிலையை உருவாக்குவது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்றது.

கோவிட்19 பொது முடக்கத்தால் சுமார் 15 கோடி பேரின் வேலை பறிபோய் விட்டது. 24 கோடி தொழிலாளர்கள் வாழ வழியின்றி தவிர்க்கிறார்கள். 35% சிறு குறு தொழில்கள் திறக்கப்படும் வாய்ப்பு இல்லை. 40 கோடி பேர் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். கோவிட்19ஐ கைக்காட்டி பொதுத் துறை அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டுள்ளது.

## கோவிட் 19ம் பொருளாதார பாதிப்பும்

கொரோனா பாதிப்பு காரணமாக அனைத்து தொழில்களும் பெரும் சரிவை சந்தித்துள்ளது. குறிப்பாக போக்குவரத்து, சுற்றுலாத்துறை மற்றும் ஓட்டல் துறையினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்துறைகளில் 5% சரிவு ஏற்பட்டால் இந்திய மொத்த வளர்ச்சி பொருளாதாரம் 2% குறையும். கோவிட் 19ல் 20% நிறுவனங்களில் பணப்புழக்கம் இல்லாமல் திணறுகின்றன. கப்பல் மற்றும் சரக்குப் போக்குவரத்து நாள் ஒன்றுக்கு 80% முதல் 90% வரை பாதிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு வரும் ஆறு மாதங்கள் வளர்ச்சி கற்பனை செய்ய முடியாத அளவுக்கு பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது.

## கொரோனாவும் இளைஞர்களும்

வேலை இழந்தோரில் பெரும்பாலானோர் இளைஞர்களே. 20 முதல் 29 வயதுடைய சுமார் 2.7 கோடி பேரும், 30 முதல் 39 வயதுடையவர்கள் 3.3 கோடி பேரும் வேலையிழந்துள்ளனர். இதனால் இளைஞர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளார்கள். பொது முடக்கத்தால் கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் ‘தனித்திரு வீட்டிலிரு விலகியிரு’ என்பதை கடைப்பிடிக்க முடியாமல் தனது அடுத்த வேளை உணவிற்காக மீன் பிடிக்கும் தொழிலில் மேற்கொள்கிறார்கள். இந்த நிலை படிப்பை முடித்து வேலை தேடும் இளைஞர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலை இழந்தவர்களில் 9.1 கோடி, தினக்கூலி 1.7 கோடி பேர், மாதச் சம்பளம் வாங்குபவர்கள் 1.8 கோடி பேர் சிறு வியாபாரிகளாக ஆனார்கள். அது மட்டுமல்லாமல் கட்டாயத்தின்பேரில் ராஜினாமாக்களும் வேலை நீக்கங்களும் அதிகரித்து வருகின்றன. பொருளாதார நெருக்கடியால் சிறு தொழில்கள் மொத்தமாக மூடப்பட்டு வருகின்றது. ஒப்பந்த முறை வேலைகள் அதிகரிக்கிறது. வேலைக்கு சேரும் இளைஞர்களுக்கு சட்ட பாதுகாப்பு மறுக்கப்பட்டு அதிரடியாக பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். கோவிட்19 பொது முடக்கம் காரணமாக வேலையின்மை அதிகரித்து இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. பொருளாதாரம் மீண்டாலும் மீண்டும் வேலை கிடைப்பது பலருக்கும் கடினமாகவே இருக்கும்.

இந்நிலையில் தமிழக அரசு படித்து முடித்த வேலையற்ற இளைஞர்களின் வாழ்வைப் பற்றி கவலைப்படாமல் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வரை 58லிருந்து 59ஆக உயர்த்தியுள்ளதால் கிடைக்கின்ற வேலையும் கிடைக்காமல் போகச் செய்யும் வாய்ப்புள்ளது. அரசு ஊழியர்களுக்கும் ஓய்வு பெறுவது தள்ளிப் போவதால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பணப்பலன்களும் கிடைக்காமல் போகிறது. இதையெல்லாம் சிந்தித்து தமிழக அரசு இளைஞர்களின் வாழ்க்கையை பாதுகாக்க துரித நடவடிக்கையில் ஈடுபட்டு வேலை உத்தரவாதத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

*- சி. பரமேஸ்வரி*

# ஓய்வுக்குப் பிறகும் உற்சாக வாழ்க்கை சாத்தியமா?

ரிடையர்மெண்ட், சூப்பர்ஆன்யுவேஷன், பென்ஷன் போன்ற வார்த்தைகளை அரசு ஊழியர்களாகிய நாம் மற்றவர்களுக்காக கேட்டபோது வராத ஒரு அச்சம், பயம், நமக்காக சொல்லப்படும்போது மட்டும் ஏற்படுகிறதே ஏன்? "என்ன தோழர் அடுத்த மே மாதமா? இல்லை ஜூனா? உங்க ரிட்டயர்மெண்ட்?'' என்று கேட்கும் தோழரை உதட்டில் புன்னகையுடனும் உள்ளுக்குள் வெளிக்காட்டா அதிர்ச்சியுடனும் பார்க்கச் செய்யும் நேரம் அது. அடுத்த ஜூன் மாதத்திற்கு பிறகு நீ வயதானவன்/வயதானவள் என்பதை பட்டவர்த்தனமாக அறிவிக்கும் அறிவிப்பல்லவா ரிட்டயர்மெண்ட்.



பிறப்பு, இறப்பு, இளமை, முதுமை இவை போன்று பணியிலிருந்து ஓய்வு பெறுவது என்பதும் இயல்பான நிகழ்ச்சிதானே. ஆனால் நடைமுறையில் பணிஓய்வினைக் கண்டு நம்மில் பலரும் அச்சப்படுகிறோம். ஓய்வுபெற இரண்டு ஆண்டுகள் இருக்கும்போதே கவலைப்படத் ஆரம்பிக்கிறோம். ஏன் இந்தக் கவலை நம்மில் பல பேருக்கு? உத்தியோகத்தில் கிடைக்கிற மனித சேவகம், இலவச வாகன வசதி, இலவச தொலைபேசி, வைஃபை, இண்டர்நெட் வசதி போன்றவற்றையெல்லாம் விட்டுவிட மனது ஒப்புக்கொள்வதில்லை. பணியில் இருக்கும் வரைதான் இந்த வாய்ப்பெல்லாம் என்கிற நிதர்சனத்தை உணரத் தவறுவதால் ஏற்படும் மன அழுத்தம்தான் இதற்குக் காரணம். இப்போது இருப்பது போலவே ஓய்வுகாலமும் இருக்குமா என்ற கவலை சிலருக்கு திடீர் திடீர் என்று வருவதும் உண்டு. இப்போது இருக்கும் சமூக மதிப்பு, சுறுசுறுப்பான வேலைகள், அலுவலர்கள், உதவியாளர்கள், தொலைபேசி, வாகனவசதி, நல்ல சூழ்நிலை, மேசை, நாற்காலி, ஏசி, பேசிப்பழக ஊழியர்கள், மாதந்தோறும் சம்பளம், பயணப்படி, போனஸ் போன்றவை ஓய்வுக்குப் பிறகு கிடைக்குமா?

உண்மைதான். இந்த வாய்ப்புகள் பணி ஓய்வு நாளுக்கு மறுநாளிலிருந்து கிடைக்கப் போவதில்லை. அதற்காக வருத்தப்பட்டு உட்கார்ந்துவிடாமல் எதுவானாலும் எதிர்த்துப்போராட பழகிக் கொள்ள வேண்டும். மாற்று ஏற்பாடுகளை முன்கூட்டியே சிந்தித்து வைத்துக்கொள்வதே சிறந்ததாகும். நெகடிவ் எண்ணங்களை ஒதுக்கி விட்டு பாசிடிவ் எண்ணங்களை மட்டும் அனுமதிப்பதுதான் இந்தபோராட்டத்தில் வெற்றி கொள்வதற்கான வழி. பழைய வெற்றிகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்காமல் அதேபோன்ற வெற்றிகளை ஓய்வுகாலத்தில் நிகழ்த்த முடியுமா? என்று யோசித்து செயல்பட ஆரம்பிக்க வேண்டும். நம்மைச்சுற்றி நிகழும் மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். நாம் பெரிதாக ஒன்றும் நம்மை மாற்றிக்கொள்ளத் தேவையில்லை. விட்டுக்கொடுக்கத் தயாராகவும், சவாலை எதிர்கொள்ளும் பக்குவத்துடனும் இருந்தாலே போதுமானது. ஓய்வு என்பது வாழ்க்கையில் பல கட்டங்களில் ஒன்றே தவிர கடைசி கட்டமல்ல.

உலக சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். சுதந்திரத்திற்காக எவ்வளவு போராட்டங்கள். எத்தனை நாடுகள் சுதந்திரத்திற்காகப் போராடி, லட்சக்கணக்கானோர் ரத்தம் சிந்தியும் மடிந்தும் சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். ஆனால் எந்த போராட்டமுமின்றி எளிமையாக கிடைப்பதுதான் ஓய்வுகால வாழ்க்கை என்ற சுதந்திரம். இதைச் சுதந்திரம் என்றால் பல பேருக்கு நம்பமுடியாமல் கூட இருக்கலாம். பணிபுரிந்த காலத்தில் எப்படி பணி புரிந்தோம் என்று ஒவ்வொரு ஊழியரும் தங்களைத் தாங்களே ரீவைண்ட் செய்து பாருங்கள். அலுவலகத்தில் ஒவ்வொரு ஊழியரும் அவர்களுக்கு இட்ட வேலையை மட்டும் செய்தார்கள், அவர்கள் விரும்பியபடி வேலையைச் செய்ய சுதந்திரம் இல்லை. தங்கள் உயரதிகாரிகள் சொன்ன வேலையை மட்டும் செய்தார்கள். அதை அவர்கள் உயரதிகாரிகள் சொன்ன நேரத்தில் செய்துமுடிக்கப் பணிக்கப்பட்டார்கள். உயரதிகாரிகள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப வேலை பார்த்தார்கள். அலுவலகத்தில் அவர்கள் நினைத்ததை அவர்கள் பாணியில் அவர்கள் விரும்பியபடி செய்ய முடிந்ததில்லை! கூண்டுப்பறவையாய் அடைக்கப்பட்டு கூலிக்காக ஆண்டுக்கணக்கில் பணியாற்றினார்கள். ஓய்வு பெற்றபிறகு சுதந்திரப் பறவைகளாய் ஆகிவிட்டோம் என்ற எண்ணம் மனதில் எழும்பிக் குதிக்க வேண்டும். இனி நாம் சுதந்திரமாக நமக்கு பிடித்த வேலையைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். சுவர்க் கடிகாரத்தைப் பார்த்து

அடிமையாக வாழாமல் விடுதலை பெற்ற பறவைகளாய் நாம் தேர்ந்தெடுத்த வேலைகளை நமக்காக செய்துகொள்ள வாய்த்த வாய்ப்பாக நினைக்க வேண்டும். ஓய்வுகாலம் பாரமல்ல, பசுமையான, வளமான எதிர்காலம் என்ற நேர்மறைச் சிந்தனையோடே செயலாற்ற வேண்டும்.

சாதிக்க வேண்டிய வயதில் சும்மா இருந்துவிட்டு ஓய்வு பெற்ற பின் என்னதை சாதிக்க முடியும் என்ற நினைப்பு உங்களுக்கு வந்தால் உடனே தயவுசெய்து அதை மூட்டை கட்டிவிடுங்கள். உலக சாதனையாளர்களை படியுங்கள். நாற்பது வயதுக்கு முன் சாதித்தவர்கள் அரிது. ஐம்பது வயதைத் தாண்டிய பிறகு தங்களுக்கென்று தனிப்பாணியை வகுத்துக் கொண்டு மளமளவென்று முன்னேறியவர்கள் பலருண்டு. பெர்னாட்ஷா ஐம்பது வயதுக்கு மேல் வெற்றியடைந்து, தொண்ணூற்று நான்கு வயது வரை தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். 85 வயதிலும் தாமல் ஆல்வா எடிசன் ஏதாவது புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்துக் கொண்டிருந்தார். தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை வேதநாயகம் பிள்ளை எழுதியபோது அவருக்கு வயது 80. நாளொரு போராட்ட களம்கண்டு மக்களுக்காக பணி செய்யும் தோழர் சங்கரய்யாவுக்கு வயது 99, எழுத்தாளர் ரமணி சந்திரன் தன்னுடைய 67 வயது வரை எழுதிக்கொண்டேயிருந்தார். டெல்லி கணேஷ் நடிகர் 70 வயது, அனுராதா ரமணன் 77வயது எழுத்தாளர், நம்மாழ்வார் 85 வயது இயற்கை வேளாண் விஞ்ஞானி, தோழர் நல்லகண்ணு 78 வயது அரசியல்வாதி, வேதவல்லி 80 வயது சங்கீத வித்வான், வளையப்பட்டி சுப்பிரமணியம் தவில் வித்வான் வயது 70, கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ராஜநாராயணன் 80 வயது. இவர்களுக்கெல்லாம் வயது ஒரு பொருட்டாகவே இருந்ததில்லை. ஏனெனில் இவர்கள் தங்கள் மனத்தை இளமையாக நேர்மறையாக வைத்துக் கொண்டவர்கள். “மனிதனுக்கு வயதாவதே இல்லை அவன் எதையாவது தேடிக்கொண்டே இருந்தால்” என்ற பழமொழி இவர்களுக்கு எப்படி பொருந்துகிறது பாருங்கள்.

எங்கள் அலுவலகத்தில் சென்ற வருடத்தில் நடந்த ஒரு பிரிவு உபசார விழாவிற்கு சற்று தாமதமாகச் சென்றேன். அங்கே ஒரு சிறுவன் அன்றைய தினம் ஓய்வுபெறும் 11 ஊழியர்களுக்காக மைக்கில் பேசிக் கொண்டிருந்தான்:

“நீங்கள் உங்கள் பணியிலிருந்து மட்டும்தான் ஓய்வு பெற்றிருக்கிறீர்கள், வாழ்வில் ஓய்வு பெறவில்லை.

முதுமை என்பது உடலின் பரிணாம வளர்ச்சி, முதுமையைக் கொண்டாடுங்கள்.

உற்சாகமான நண்பர்களுடனே இருங்கள். எப்போதும் நகைச்சுவை உணர்வுடன் வாழுங்கள்.

சோர்டையாமல் மன நிறைவுடன் இருக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

கட்டுப்பாடான உணவு, தொடர் உடற்பரிசோதனை, முறையான உடற்பயிற்சி மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.

உங்களது செலவினங்களை வரைமுறைப்படுத்தி கட்டுக்குள் வைத்திருங்கள். தனியாக இருப்பதை தவிர்த்து விடுங்கள்.

கடைசியாக பணிபுரிந்த இடத்திற்குச் செல்வதை குறைத்துக் கொள்ளுங்கள். சூழ்நிலைக்கேற்ப வாழக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் முதலீடுகளை பாதுகாப்பாக சேமியுங்கள் அதிகமான வட்டிக்கு ஆசைப்பட வேண்டாம்.

தூங்கும் நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருங்கள். உங்கள் வயதைப்பற்றி கவலைப்படாதீர்கள். இளைய தலைமுறையிடம் உங்கள் சுயபுராணம் பாடாதீர்கள்.

ஏழ்மையான மக்களுக்கு இலவச ஆலோசனை வழங்குங்கள். இரவு படுப்பதற்கு முன்பு இனிமையான இசையைக் கேளுங்கள். மரணம் தவிர்க்க முடியாதது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.”

நிகழ்ச்சி முடிந்ததும் அவனைப் நேரடியாக சென்று பாராட்டி விட்டு “யார் சொல்லிக் கொடுத்தாங்க இதையெல்லாம்” என்று கேட்டேன். அவன் தன் பாட்டியை கைகாட்டி “அவங்கதான்'' என்றான். அந்தப் பெண்மணி அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர், “ஓய்வு காலத்தை உற்சாகமா கழிக்க சில டிப்ஸ்களை இப்படி எனக்கு தெரிந்த சில அலுவலகங்களில் நடக்கும் பிரிவு உபசார விழாவில் கலந்து கொண்டு என் பேரனை பேசச் சொல்வேன். அப்படியே அந்த அலுவலகத்துல இருக்கிற ஊழியர்களிடமும் உரையாடுவேன். இது எனக்கு உற்சாகமா இருக்கு. அவங்களுக்கு உபயோகமா இருக்கு'' என்றார். மேற்சொன்ன குறிப்புகள் நம்முடைய பணிஓய்விற்குப் பின் உபயோகமாக இருக்கலாம். அடுத்த ஆண்டு ஓய்வுபெறவிருக்கும் நம்முடைய சக தோழர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கலாம். எனவே பகிர்வோம், பயனடைவோம். ஓய்வுக்குப் பிறகு உற்சாக வாழ்க்கையை சாத்தியப்படுத்துவோம்.

\- **ஜிஜி**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com




மாநில மையத்தில் நடைபெற்ற தோழர் ஆர்.எம்.எஸ். 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வில் மாநிலத் தலைவர் மற்றும் சென்னை மாவட்ட நிர்வாகிகள்



ஈரோடு



திருவாரூர்



ராணிப்பேட்டை



கோவை



நீலகிரி



கபசுர குடிநீர் - விருதுநகர்

Registered Postal Registration No.TN/CH/(C)/200/2018-2020 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431-2020 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirka Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 13.08.2020












Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai,Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com